# தினபூமி

thinaboomi.com

பூமி: 31 சுற்று: 216 ஆனி 27 | Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94

திருச்சி, வெள்ளி, ஜூலை 11, 2025 | சென்னை • மதுரை • திருச்சி • கோவை • நெல்லை • சேலம் • வேலூர் • புதுச்சேரி | பக்கம் 8 | ₹3.00




**பிரேசிலுக்கு 50 சதவீத வரி: ட்ரம்ப் முடிவுக்கு அதிபர் லூலா டி சில்வா எதிர்ப்பு**
...2-ம் பக்கம்

**சூதாட்ட செயலி விளம்பரம்: நடிகர்கள் 29 பேருக்கு சிக்கல் அமலாக்கத்துறை வழக்குப்பதிவு**
...3-ம் பக்கம்

**விரைவில் இந்திய அணி இலங்கை சுற்றுப்பயணம் கோலி, ரோகித் ரசிகர்கள் மகிழ்ச்சி**
...6-ம் பக்கம்





● திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் 73 கோடியே 74 லட்சம் ரூபாய் செலவில் 1,234 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 172 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 2,423 புதிய திட்டப் பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், முனைவர்.கோவி.செழியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன், டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவாரூரில் அரசு விழா: ரூ.172.18 கோடி மதிப்பிலான

# 2,423 புதிய திட்டப்பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல்

*** ரூ.73.74 கோடியில் 1,234 முடிவுற்ற பணிகள் திறப்பு**

*** ரூ.600 கோடியில் 67,181 பேருக்கு நலத்திட்ட உதவிகள்**

திருவாரூர், ஜூலை 11-

**திருவாரூரில் நேற்று நடந்த அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ரூ.172.18 கோடி மதிப்பிலான 2,423 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும் ரூ.73.74 கோடியில் 1,234 முடிவுற்ற பணிகளையும் அவர் திறந்து வைத்தார். ரூ.600 கோடியில் 67,181 பேருக்கு நலத்திட்ட உதவிகளையும் முதல்வர் வழங்கினார்.**

**புதிய கட்டிடங்கள்...**

திருவாரூர் மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில், திருவாரூர் மாவட்டத்தின் புதிய ஊராட்சி மன்ற அலுவலகங்கள், பொது விநியோகக் கட்டிடங்கள், அங்கன்வாடி கட்டிடங்கள், கோ-லொகேஷன் சென்டர், பள்ளிக் கட்டிடங்கள், பொது நூலகக் கட்டிடங்கள், பேருந்து நிழற்குடைகள், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், நேரடி கொள்முதல் நிலையங்கள், கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் என மொத்தம் 42 கோடியே 8 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் 1209 முடிவுற்ற பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

**பொதுசுகாதார கட்டிடம்**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் 9 கோடி ரூபாய் செலவில் கூடுதல் கட்டிடம், மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில் 1 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் மாவட்ட ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம், விஜயபுரம் அரசு தாய் சேய் நல மருத்துவமனையில் 6 கோடி ரூபாய் செலவில் சீமாங்க் கட்டிடம், ஆதிச்சபுரத்தில் 50 லட்சம் ரூபாய் செலவில் பொது சுகாதார அலகு கட்டிடம், பெரும்புகலூரில் 20 லட்சம் ரூபாய் செலவில் துணை சுகாதார நிலையம், கூத்தாநல்லூரில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

66 லட்சம் ரூபாய்....

பள்ளிக் கல்வித் துறை சார்பில், கடுவங்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் 52 லட்சத்து 22 ஆயிரம் ரூபாய் செலவில் கலை பண்பாட்டு அறை, ஆய்வகம் மற்றும் நூலகம் கட்டிடங்கள், பொது நூலகத் துறை சார்பில் உள்ளிக்கோட்டை, கூப்பாச்சிக்கோட்டை மற்றும் எடையூர் ஆகிய இடங்களில் 66 லட்சம் ரூபாய் செலவில் கிளை நூலகங்கள். நகராட்சி நிர்வாகம்

(கடைசி பக்கம் பார்க்க)

### தமிழகத்தின் பெருமையை மறைக்க மத்திய அரசு

# கீழடி ஆய்வறிக்கையை வெளியிட மறுக்கிறது

### திருவாரூர் அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

திருவாரூர், ஜூலை 11-

**பா.ஜ.க.வுக்கு டப்பிங் வாய்ஸ் போல பேசிய பழனிசாமி, தற்போது ஒரிஜினல் வாய்ஸ் ஆகவே பேச தொடங்கியுள்ளார் என திருவாரூரில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதல்வர் ஸ்டாலின் விமர்சனம் செய்து பேசினார்.**

**சகித்துக் கொள்ளாமல்**

திருவாரூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வரும் முதல்வர் ஸ்டாலின், நேற்று ரூ.846.47 கோடிக்கு 1234 முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும் , 2,423 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், 67,181 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

பின்னர் விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: மத்திய ஆட்சியின் இடையூறுகளையும் சமாளித்து, திராவிட மாடல் தி.மு.க. அரசு செய்து வருகின்ற சாதனைகளை சகித்துக் கொள்ள முடியாத எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, தமிழ்நாடு என்று பெயர் சொல்வதைக் கூட தவிர்த்துக் கொள்பவர்களுடன் அதி.மு.க.வை தற்போது சேர்த்துவிட்டார்.

**அ.தி.மு.க.வையே மீட்க...**

அவர் தமிழகத்தை மீட்போம் எனக் கூறி ஒரு பயணத்தை தொடங்கி இருக்கிறார். முதலில் அ.தி.மு.க.வையே மீட்க முடியாதவர் . தமிழகத்தை மீட்க போகிறேன் என்கிறார். பழனிசாமி அவர்களே, தங்களிடமிருந்து தமிழ்நாடு ஏற்கனவே மீட்கப்பட்டு விட்டது. கூவத்தூரில் ஏலம் எடுத்து, கலெக்‌ஷன், கரெப்சன், கமிஷன் என்றுகூறி தமிழகமே பார்க்காத அவலமான ஆட்சியை நடத்தினீர்கள். செய்த குற்றங்களிலிருந்து தங்களை காப்பாற்றிக் கொள்ள தமிழ்நாட்டையும், தமிழர்களின் உரிமையையும் அடகு வைத்தீர்கள்.

**துரோகம் செய்வதுதான்**

நீங்கள் செய்தது ஒன்றா, இரண்டா அவற்றை எல்லாம் சரி செய்து, தமிழகத்தை இந்தியாவிலேயே நம்பர் ஒன் இடத்தைப் பெற்று, 9.69 சதவீதம் வளர்ச்சியை பெறச்செய்துள்ளோம். வெளிமாநில மக்கள் எல்லாம் தமிழ்நாட்டைப் பற்றி பெருமையாக பேசும் நிலையை உருவாக்கி இருக்கிறோம்.

இதெல்லாம் பழனிசாமிக்கு தெரியாது. அவருக்கு தெரிந்ததெல்லாம் துரோகம் செய்வது மட்டும்தான். உங்களைக் கொண்டு வந்தவர்களை துரோகம் செய்து வெளியில் அனுப்பினீர்கள். உங்களை நம்பி இருந்த கட்சிக்கும், தொண்டர்களுக்கும் துரோகம் செய்து கூட்டணி அமைத்தீர்கள்.

ஆட்சியில் இருந்தபோது தமிழ்நாட்டின் உரிமையை அடகு வைத்து தமிழக மக்கள் ஒவ்வொருவருக்கும் துரோகம் செய்தீர்கள்.

**நிதியை கொடுக்கவில்லை...**

மத்திய அரசு தமிழகத்துக்கு நிதியை கொடுப்பதில்லை. நாம் கொடுக்கின்ற ஜி.எஸ்.டி. வரிக்கான நிதியையும் கொடுப்பதில்லை. சிறப்பு திட்டங்கள் எதுவும் கொடுப்பதில்லை மத்திய அரசின் திட்டங்களுக்கே தமிழக அரசுதான் நிதி கொடுத்து வருகிறது.

நமது தமிழக மாணவர்கள் படிப்பதற்கான நிதியை கொடுக்கவில்லை. எல்லா மாநிலங்களுக்கும் கல்வி நிதியை கொடுக்கும் நிலையில், தமிழகத்துக்கு மட்டும் அந்த நிதி கொடுப்பதில்லை.

**கூச்சமே இல்லாமல்...**

தமிழகத்தின் பெருமையை வெளியே தெரிந்து விடக் கூடாது என்பதற்காக கீழடி ஆய்வறிக்கையை வெளியிட மறுக்கின்றனர். அது மட்டுமா தொகுதி மறுவரையறை பிரச்சனை, வாக்காளர் பட்டியலில் குளறுபடி இப்படி தமிழகத்துக்கு எல்லா வகையிலும் பிரச்சனைகளை ஏற்படுத்தி வருகின்றவர்களுடன் கூட்டணி வைத்துக்கொண்டு எப்படி உங்களால் கூச்சமே இல்லாமல் பயணிக்க முடிகிறது.

**ஒரிஜினல் வாய்ஸாக...**

இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் , கல்லூரிகள் கட்டக்கூடாது என்கிறார். முன்பெல்லாம் பா.ஜ.க.வுக்கு டப்பிங் வாய்ஸ் பேசிக் கொண்டிருந்தார். தற்போது ஒரிஜினல் வாய்ஸ் ஆகவே பேசத் தொடங்கி விட்டார். அறநிலையத்துறை சட்டத்திலேயே கல்லூரி தொடங்க சட்டம் உள்ளது. மறைந்த பக்தவச்சலம் தொடங்கி இந்த சட்டம் உள்ளது.

எம்ஜிஆர் பழனியாண்டவர் கல்லூரியை தொடங்கி வைத்தார். அதே கல்லூரியில் கூடுதல் கட்டிடங்களை நீங்கள் கடந்த ஆட்சியில் சென்று திறந்து வைத்தீர்கள். நாங்கள் திறந்து வைத்தால் மட்டும் தவறா? பா.ஜ.க. தலைவர்களே இது போன்று கல்லூரி திறக்கக் கூடாது எனப் பேசுவதில்லை. ஆனால் பழனிசாமி பேசுவதை பார்த்து "கொடுத்த காசுக்கு மேல கூவுறான்" என்ற வடிவேலு பட வசனத்தை சொல்லி பழனிசாமியை கிண்டல் செய்கிறார்கள்.

**அவ்வளவு கசக்கிறது....**

இந்து சமய அறநிலையத் துறை சாதனைகள் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளைவிட அதிக பட்டியல் கொண்டது. ஏன் உங்களுக்கெல்லாம் படிப்பு என்றால் அவ்வளவு கசக்கிறது.

உங்களுக்கு படிப்பின் மேல் அவ்வளவு அக்கறை இருந்தால் கும்பகோணத்தில் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பெயரில் பல்கலைக்கழகம் தொடங்க சட்டம் இயற்றப்பட்டு ஒப்புதலுக்காக ஆளுநருக்கு அனுப்பி வைத்து இரண்டு மாதம் ஆகிறது.

இதுவரை அனுமதி தரவில்லை. நீங்கள் அனுமதி தந்தாலும் தராவிட்டாலும், நாங்கள் சட்டத்தின் வழியில் நின்று, கருணாநிதியின் பெயரில் பல்கலைக்கழகம் அமைப்போம் என்று பேசினார்.

> **தமிழகத்தை வஞ்சிக்கும் சக்திகள் எப்படி வேண்டுமானாலும் வரட்டும் ஆனால், மக்களாகிய நீங்கள், ஓரணியில் தமிழ்நாடு என்று எங்கள் பக்கம் நிற்க வேண்டும். நம்முடைய மண், மொழி, மானம் காக்க என்றைக்கும் தி.மு.க.வும், நானும் துணை நிற்போம்.**
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

### பீகார் மாநிலத்தில் நடைபெறும்

# சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிக்கு தடையில்லை

### ஆதார், ரேஷன் அட்டையை செல்லுபடியாகும் ஆவணமாக கருத சுப்ரீம் கோர்ட் அறிவுறுத்தல்

புதுடெல்லி, ஜூலை 11-

**'பீகார் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டிய சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி நடவடிக்கைகு ஆதார் அட்டையை ஓர் அடையாள ஆவணமாக ஏற்காதது ஏன்?' என்று இந்திய தேர்தல் ஆணையத்துக்கு சுப்ரீம் கோர்ட் கேள்வி எழுப்பி உள்ளது.**

பீகாரில் வருகிற நவம்பர் மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. அதற்காக தேர்தல் கமிஷன், அங்கு சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தும் பணியை மேற்கொண்டு உள்ளது. பொதுவாக தேர்தல் கமிஷன் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களின் 1-ம் தேதியை தகுதியேற்பு நாளாக கொண்டு ஆண்டுக்கு 4 முறை சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணியை மேற்கொண்டு வருகிறது.

ஆனால் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி என்பது முற்றிலும் வேறுபாடானது. இதன் மூலம் வாக்காளர் பட்டியல் முழுமையாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்படும் ஒரு விரிவான நடவடிக்கையாகும். பீகாரில் இந்த பணியில் 98,498 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஈடுபட்டு உள்ளனர். இதுதவிர ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்களும் ஈடுபட்டு உள்ளனர்.

இந்த பணிக்காக அவர்கள் வீடு, வீடாக சென்று வாக்காளர் பட்டியலை சரிபார்த்து வருகின்றனர். அதோடு வாக்காளர்களுக்கு படிவங்கள் கொடுக்கப்படுகின்றன. அவற்றை வாக்காளர்கள் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அதோடு மிக முக்கியமாக 2003-ம் ஆண்டுக்கு பிறகு வாக்காளர் பட்டியலில் சேர்ந்தவர்கள் இந்திய குடிமகன் என்பதற்கான பிறப்பு சான்றிதழ் அல்லது பாஸ்போர்ட் உள்ளிட்ட 11 ஆவணங்களில் ஏதாவது ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

ஒருவேளை இந்த ஆவணங்கள் இல்லாத பட்சத்தில் அவர்களது பெற்றோர்களின் குடியிருப்பு ஆவணங்களும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதனையும் வழங்காவிட்டால் வாக்காளர் பெயரை நீக்குவது குறித்து அந்தப்பகுதி வாக்குச்சாவடி அலுவலர் முடிவு செய்வார் என்றெல்லாம் கூறப்பட்டு இருந்தது. பீகாரில் விரைவில் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், இந்த சிறப்பு திருத்த முறைக்கு எதிர்ப்பு கிளம்பியது. இதையடுத்து, சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, ஆதார் அட்டையை குடியுரிமை ஆவணமாக ஏற்க முடியாது என்று தேர்தல் ஆணையம் திட்டவட்டமாக தெரிவித்தது. குடியுரிமை விவகாரத்தில் உள்துறை அமைச்சகம்தான் முடிவெடுக்க முடியும் என்றும் ஆதார் அட்டையை குடியுரிமை ஆவணமாக ஏற்க முடியாது என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. வாக்காளர் பட்டியல் திருத்தம் நாடு முழுவதும் அமலாகும். இதைக் கேட்ட சுப்ரீம் கோர்ட், ஆதார் அட்டையை ஏற்க முடியாது என ஏன் குறுகிய காலத்தில் முடிவெடுக்கப்பட்டது. முன்னரே இந்த நடவடிக்கையை தொடங்கியிருக்கலாமே? என தேர்தல் ஆணையத்துக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் பிறப்பிக்க உத்தரவிட்டது.

மேலும் சுப்ரீம் கோர்ட் கூறியதாவது: "ஆதார், வாக்காளர் அடையாள அட்டை, ரேஷன் அட்டை ஆகியவற்றை செல்லுபடியாகும் ஆவணமாக கருதுங்கள். 11 ஆவணங்களின் பட்டியல் முழுமையானது அல்ல என தேர்தல் ஆணைய வழக்கறிஞர் கூறியிருக்கிறார். எனவே, தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை, ரேஷன் அட்டை ஆகியவற்றை பரிசீலியுங்கள்" எனக்கூறியது.

# தமிழகத்தில் 6 நாட்கள் மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜூலை 11-

**தமிழகத்தில் வரும் 16-ம் தேதி வரை 6 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் இன்று ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 12, 13, 14 தேதிகளில் ஓரிரு இடங்களிலும், 15, 16 தேதிகளில் ஒரு சில இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் இன்று ஒரு சில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 81 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். தென்தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் இன்று முதல் 14-ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 65 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம்

### மத்திய அரசு அறிவிப்பு

வாஷிங்டன் டி.சி., ஜூலை 11-

**அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தத்திற்கான இறுதி பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளார்.**

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசும்போது, இங்கிலாந்துடனும், சீனாவுடனும் ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இந்தியாவுடன் ஒப்பந்தம் முடிய கூடிய நிலையில் உள்ளது என கூறியுள்ளார். இதனால், புதிய வரி விதிப்புகளுக்கான நாடுகளின் பட்டியலில் இந்தியா இருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்படுவதற்காக, அந்நாட்டுடனான பேச்சுவார்த்தைக்கான முயற்சியில் இந்தியா உள்ளது. இதனை வர்த்தக துறையின் சிறப்பு செயலாளர் ராஜேஷ் அகர்வால் நேற்று உறுதிப்படுத்தி உள்ளார். இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்திற்கான தலைமை பேச்சுவார்த்தை நடத்துபவராகவும் அகர்வால் உள்ளார்.

இந்தியா தரப்பில், இதுவரை 26 நாடுகளுடன் 14-க்கும் மேற்பட்ட வெளிப்படையான வர்த்தக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இங்கிலாந்துடன் வர்த்தக ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு உள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்துடனான வர்த்தக ஒப்பந்தம் ஒன்று முன்னேற்ற நிலையில் உள்ளது. அமெரிக்காவுடனும் ஒப்பந்தம் இறுதி செய்வதற்கான பேச்சுவார்த்தைக்கான முயற்சி நடந்து வருகிறது என அவர் கூறியுள்ளார். இதே போன்று ஆஸ்திரேலியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுடனான வர்த்தக ஒப்பந்தம் முடிவடைந்துள்ளது. நியூசிலாந்துடன் வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தை நடந்து வருகிறது என்றார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -345.80 | -120.85 |
| பாயின்ட் 83,190.28 | பாயின்ட் 25,355.25 |

**தங்கம்**
1 சவரன் ₹71,360
1 கிராம் ₹9,020

**வெள்ளி**
1 கிலோ ₹120,000
1 கிராம் ₹120.00

**டாலர்** ₹85.75

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

## பிரேசிலுக்கு 50 சதவீத வரி:
# ட்ரம்ப் முடிவுக்கு அதிபர் லூலா டி சில்வா எதிர்ப்பு

**வாஷிங்டன், ஜூலை 11-**

பிரேசில் நாட்டுக்கு 50% வரி விதிப்பதாகவும், இலங்கை, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட 7 நாடுகளுக்கு 30 சதவீதம் வரை வரி விதிக்கப்படுவதாகவும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து 8 நாடுகளின் தலைவர்களுக்கு அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அதிகாரபூர்வ கடிதங்கள் எழுதியுள்ளார். இந்த நாடுகள் மீதான அனைத்து புதிய வரிகளும் ஆகஸ்ட் 1 முதல் அமலுக்கு வரும் என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இதன்படி பிரேசில் நாட்டுக்கு 50 சதவீதம் வரி விதிப்பதாக அறிவித்துள்ளார். மேலும், அல்ஜீரியா, ஈராக், லிபியா மற்றும் இலங்கை நாடுகளுக்கு 30% வரியும்; புருனே மற்றும்



மால்டோவா நாடுகள் மீது 25% வரியும்; பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு 20% வரியும் விதிக்கப்படுவதாக ட்ரம்ப் அறிவித்தார்.

'நியாயமற்ற வர்த்தக ஏற்றத்தாழ்வுகளை' சரிசெய்யும் முயற்சியாக இந்த வரிவிதிப்பு இருக்கும் என ட்ரம்ப் தெரிவித்தார். பிரேசில் நாட்டின் முன்னாள் அதிபர் ஜெய்ர் போல்சனாரோ மீது வழக்குத் தொடரப்பட்டதற்கு பதிலடியாக, அந்நாட்டின் மீது 50% வரி விதிக்கப்பட்டதாக அமெரிக்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லூலாவின் எதிர்வினை: ட்ரம்பின் 50 சதவீத வரிவிதிப்பு குறித்து லூலா டி சில்வா வெளியிட்ட எக்ஸ் பதிவில், "பிரேசில் இறையாண்மை கொண்ட நாடு, எனவே நாங்கள் வெளியில் இருந்து வரும் எந்தவொரு அச்சுறுத்தலையும் ஏற்கமாட்டோம். அமெரிக்கா எங்கள் மீது புதிய வரிகளை விதித்தால், பிரேசில் அதற்கான பதிலடியை பிரேசிலின் பொருளாதார சட்டம் மூலம் கொடுக்கும்." எனத் தெரிவித்துள்ளார்

## கர்நாடகாவில் முதல் மந்திரி பதவி காலியாக இல்லை: சித்தராமையா

**புதுடெல்லி, ஜூலை.11-**

கர்நாடகாவில் முதல் மந்திரி பதவி காலியாக இல்லை என்று சித்தராமையா தெரிவித்துள்ளார்.

கர்நாடகத்தில் கடந்த 2023-ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. அப்போது முதல்-மந்திரி பதவிக்கு சித்தராமையா, டி.கே.சிவக்குமார் இடையே கடும் போட்டி ஏற்பட்டது. இறுதியில் சித்தராமையா அரியணையில் அமர்த்தப்பட்டார். அப்போது முதல்-மந்திரி பதவி சித்தராமையா, டி.கே.சிவக்குமார் ஆகியோருக்கு தலா 2½ ஆண்டுகள் என்று காங்கிரஸ் மேலிடம் ஒப்பந்தம் செய்து கொண்டதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் கூட்டுறவுத்துறை மந்திரி கே.என்.ராஜண்ணா, வருகிற செப்டம்பர் மாதம் கர்நாடக அரசியலில் புரட்சி ஏற்படும் என்று கூறினார். அதாவது முதல்-மந்திரி சித்தராமையா மாற்றப்பட உள்ளதாக அவர் சூசகமாக கூறினார். அவரது இந்த கருத்து கர்நாடக அரசியலில் புயலை கிளப்பியது. பா.ஜனதா தலைவர்கள், சித்தராமையா மாற்றப்படுவது உறுதி என்று கூறினர். இதை மந்திரி ராஜண்ணாவின் கருத்து உறுதி செய்வதாக உள்ளது.

இதனால் கர்நாடக அரசியலிலும், காங்கிரஸ் கட்சியிலும் முதல்-மந்திரி பதவி விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. இதையடுத்து காங்கிரஸ் மேலிடம் முதல்-மந்திரி பதவி குறித்து மந்திரிகள், எம்.எல்.ஏ.க்கள் பொதுவெளியில் கருத்துக் கூறக் கூடாது என தடை விதித்தது. இத்தகைய பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் துணை முதல்-மந்திரி டி.கே.சிவக்குமாரும் சித்தராமையாவும் டெல்லிக்கு படையெடுத்தனர்.

டெல்லியில் ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோரை சித்தராமையா சந்தித்து பேச இருப்பதாக தெரிகிறது. இதற்கிடையே, நேற்று டெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த சித்தராமையாவிடம் முதல் மந்திரி மாற்றப்படுவாரா? என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த சித்தராமையா," முதல் மந்திரி பதவி எதுவும் காலியாக உள்ளதா? நான்தான் கர்நாடகாவின் முதல் மந்திரி. இதைத்தான் டிகே சிவக்குமாரும் கூறியுள்ளார். நானும் அதையே சொல்கிறேன். முதல் மந்திரி பதவி காலியாக இல்லை" என்றார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 600 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 67,181 பயனாளிகளுக்கு வழங்கிய நிகழ்வில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், முதலமைச்சர் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில், பயனாளிகளுக்கு வைப்புத்தொகைகளுக்கான ரசீதுகளை வழங்கினார்.

# அ.தி.மு.க. சார்பில் வருகிற 16-ம் தேதி திருவண்ணாமலையில் ஆர்ப்பாட்டம்
## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

**திருவண்ணாமலை, ஜூலை 11-**

திருவண்ணாமலை மாநகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து வருகிற 16-ந்தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

திருவண்ணாமலை கிழக்கு மாவட்டம், திருவண்ணாமலையில் நிலவி வரும் பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகளால், பக்தர்கள், வியாபாரிகள் உள்ளிட்ட பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பக்தர்கள் தரிசனம் செய்வதற்கு முறையான வழிமுறைகளைக் கையாளாததால், அண்ணாமலையார் கோவிலுக்கு வரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பலமணி நேரம் காத்துக்கிடக்கும் அவலம் ஏற்படுகிறது..



4 மணி நேரத்திற்கும் மேலாக வரிசையில் காத்திருக்கும் பக்தர்களுக்கு உணவு மற்றும் குடிநீர் வசதி ஏற்பாடு செய்யாத அவலம் நிலவுகிறது. சுவாமி தரிசனம் செய்வதற்காக வரும் பக்தர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு முறையான வசதிகள் செய்து தரப்படவில்லை. முறையான பார்க்கிங் வசதி இல்லாத காரணத்தால் அடாவடி கட்டணம் வசூல் செய்யப்படுகிறது.

திருவண்ணாமலை மாநகராட்சியின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யாத மாநகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து அ.தி.மு.க. திருவண்ணாமலை கிழக்கு மாவட்டத்தின் சார்பில் 16.7.2025 – புதன் கிழமை காலை 10 மணியளவில், திருவண்ணாமலை மாநகராட்சி அண்ணா சிலை அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மு.ஊ. வீரமணி தலைமையிலும்; திருவண்ணாமலை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ். இராமச்சந்திரன் முன்னிலையிலும் நடைபெறும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மனித நேயத்துக்கு எதிரான குற்றம்:
# ஷேக் ஹசீனா மீது குற்றச்சாட்டு பதிவு

**டாக்கா, ஜூலை 11-**

வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மீது குற்றச்சாட்டுகள் பதிவாகி உள்ளது.

அரசுக்கு எதிரான போராட்டத்தின் போது மாணவர்கள் உயிரிழந்த விவகாரத்தில் சிறப்பு தீர்ப்பாயத்தில், வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. கடந்த ஆண்டு மாணவர்கள் போராட்டத்தின் போது, போராட்டத்தை ஒடுக்குவதற்காக ஷேக் ஹசீனா நேரடியாக உத்தரவு பிறப்பித்து இருந்தார். இது குறித்த ஆடியோ இணையதளங்களில் கசிந்தது.

இந்நிலையில், நீதிபதி கோலம் மோர்டுசா மஜூம்தர் தலைமையிலான 3 நபர்கள் தீர்ப்பாயத்தில், மனித நேயத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டார் என ஷேக் ஹசீனா, முன்னாள் உள்துறை அமைச்சர் அசாதுஜமன் கான் மற்றும் முன்னாள் போலீஸ் அதிகாரி சவுத்ரி அப்துல்லா ஆகியோர் மீது 5 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனை தீர்ப்பாயம் ஏற்றுக் கொண்டது.

## சத்தீஸ்கரில் 12 நக்சலைட்கள் சரண்

**ராய்ப்பூர், ஜூலை 11-**

சத்தீஸ்கரில் 12 நக்சலைட்டுகள் சரணடைந்துள்ளனர்.

சத்தீஸ்கரின் தண்டேவாடாவில் 2 பெண்கள் உள்ளிட்ட 12 நக்சலைட்கள், போலீஸ், சிஆர்பிஎப் அதிகாரிகள் முன்னிலையில் சரணடைந்துள்ளனர். இவர்களில் ரூ.28.50 லட்சம் வெகுமதி அறிவிக்கப்பட்ட 9 பேரும் அடங்குவர். அரசின் 'உங்கள் வீடு, கிராமத்துக்கு திரும்பு' பிரச்சாரத்தின் கீழ் மாவட்டத்தில் இதுவரை 1,005 நக்சலைட்கள் சரண் அடைந்துள்ளனர்.

இந்த சாதனை அரசின் தொலைநோக்கு கொள்கைகள், பாதுகாப்புப் படைகளின் தொடர் நடவடிக்கை மற்றும் உள்ளூர் சமூகங்களின் நம்பிக்கையை பிரதிபலிக்கிறது. மாவோயிஸ்ட்களின் வெற்று சித்தாந்தத்தால் வழிதவறிச் சென்ற இளைஞர்கள் மீண்டும் நல்வழிக்கு திரும்பியுள்ளனர்.

## கனடாவில் விமான பயிற்சியில் விபத்து:
# இந்திய மாணவன் உள்பட இருவர் பலி

**கனடா, ஜூலை 11-**

கனடாவில் விமானப் பயிற்சியின் போது இரு விமானங்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இந்திய மாணவன் உள்பட 2 பேர் உயிரிழந்தனர்.

மனிடோபாவில் உள்ள ஸ்டெயின்பாக் பகுதியில் உள்ள விமானம் ஓட்டும் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இதில் கேரளாவின் திருப்பூணித்துறையைச் சேர்ந்த ஸ்ரீஹரி சுகேஷ்,23 என்பவரும், கனடாவைச் சேர்ந்த சவானா மே ராய்ஸ் என்பவரும் பயிற்சி பெற்று வந்தனர்.

கடந்த 3 தினங்களுக்கு முன்பு இருவரும் தனித்தனியாக விமானத்தை இயக்கும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது,வின்னிபெக்கில் இருந்து 60 கி.மீ., தொலைவில் தெற்கு விமான நிலையம் அருகே விமானத்தை தரையிறக்க முயன்றனர். அந்த சமயம் யாரும் எதிர்பாராதவிதமாக, 400 மீட்டர் உயரத்தில் இருவரின் விமானங்களும் மோதி விபத்துக்குள்ளானது. உடனே தீயும் பற்றிக் கொண்டது. இதில், ஸ்ரீஹரி மற்றும் சவானா ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இது குறித்து கனடா போக்குவரத்து பாதுகாப்பு வாரியம் விசாரணை நடத்தி வருகிறது.

**11-07-2025**




**மேஷம்:-** உடன்பிறப்புகளால் அதிக உதவி உண்டு. கோவில், குளம் பணிகளில் ஈடுபடுவீர்கள். அனைத்திலும் எளிதில் வெற்றி கிடைக்கும். சுற்றுலாப் பயணங்கள் சென்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**ரிஷபம்:-** வழக்குகளை ஒத்திப் போடுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிவோடு நடந்தால் அனுகூலமான சூழல் நிலவும். வீட்டில் உள்ள விலை உயர்ந்த பொருட்களை பாதுகாப்பாக வைப்பது அவசியம்.

**மிதுனம்:-** குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். புதிய ஆடை அணிகலன்கள் வாங்குவீர்கள்., சாஸ்திர ஆராய்ச்சியும், அதில் தேர்ச்சியும் ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும்.

**கடகம்:-** தனவரவு அதிகரிக்கும். எதிரிகள் அடி பணிவர். ஆரோக்கியம் மேம்படும். பயண சுகம் ஏற்படும். தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள் குதுகலமாய் நிறைவேறும்.

**சிம்மம்:-** சுமாரான நாள். உங்கள் திறமைகள் அனைத்தையும் வெளிக்காட்டி வேலை செய்தாலும் ஏளனமே மிஞ்சும். பயணங்களின் போது விபத்து நேராவண்ணம் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

**கன்னி:-** தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சியைக் கைவிடாது தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றி துணிவுடன் செயல்களில் இறங்குங்கள்.

**துலாம்:-** அனைத்துச் செயல்களிலும் எளிதில் வெற்றி கிடைக்கும். உல்லாசமான சுற்றுலாப் பயணங்கள் ஆகியவை ஏற்படும். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**விருச்சிகம்:-** கோபத்தால் குழப்பங்கள் ஏற்படலாம். மனைவியின் கலகத்தால், உறவுகளுக்குள் பகை ஏற்படும். அக்கம் பக்கத்தினருடன் அளவாகப் பழகுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிவாக நடத்தல் அவசியம்.

**தனுசு:-** இன்று, குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். சாத்திரங்களில் ஆராய்ச்சியும், தேர்ச்சியும் ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும். எதையும் துணிச்சலுடன் எதிர் கொள்வீர்கள்.

**மகரம்:-** பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். செலவைக் குறைக்க, புதிய பொருட்களை தேவைப்பட்டால் மட்டும் வாங்கவும். மாற்றங்கள் நிகழும். குறிக்கோளின்றி மனம் போன போக்கில் அலைய நேரும்.

**கும்பம்:-** கௌரவக் குறைவு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்வது சிறப்பு. பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. துன்பம் வந்த போதினிலும் சிரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

**மீனம்:-** அன்னையின் ஆரோக்கியத்தில் சிறப்பு கவனம் தேவை. தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். துணிவுடன் செயல்களில் இறங்குங்கள்.

## குஜராத்தில் பாலம் இடிந்து விபத்து:
# பலி எண்ணிக்கை 15 ஆக அதிகரிப்பு

**வடோதரா, ஜூலை 11-**

குஜராத் மாநிலத்தில் ஆற்றுப் பாலம் திடீரென இடிந்து விழுந்ததில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது.

குஜராத் மாநிலம் வடோதரா மாவட்டம் பத்ரா தாலுகாவில் மஹிசாகர் (மஹி) ஆற்றின் குறுக்கே கம்பீரா - முஜிப்புர் பகுதிகளை இணைக்கும் பாலம் இருந்தது. வழக்கம்போல நேற்று முன்தினம் காலை வாகனங்களில் ஏராளமானோர் பள்ளி, கல்லூரிகளுக்கும், வேலைக்கும் சென்று கொண்டிருந்தனர்.

திடீரென பாலத்தின் ஒரு பகுதி இடிந்து ஆற்றில் விழுந்தது. இதனால் பாலத்தில் சென்ற பலர் வாகனங்களுடன் ஆற்றில் விழுந்தனர். இதில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது. அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் ஆற்றில் நீந்திச் சென்று பலரை மீட்டனர். தகவலறிந்து விரைந்துவந்த போலீஸார், தீயணைப்புப் படையினர், மாநில மீட்புப் படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

முதல்கட்ட விசாரணையில் பாலத்தின் மீது சென்று கொண்டிருந்த 2 டிரக்குகள், எஸ்யுவி கார், வேன் உள்ளிட்ட வாகனங்கள் ஆற்றில் விழுந்தது தெரியவந்துள்ளது. பத்ரா எம்.எல்.ஏ. சைதன்யாசின் ஜலா உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்து ஆய்வு நடத்தினார்.

குஜராத் மாநில அரசு சார்பில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.4 லட்சம், காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படும் என்றும், முழு மருத்துவ சிகிச்சைக்கான செலவை அரசு ஏற்கும் என்றும் முதல்வர் பூபேந்திர படேல் அறிவித்துள்ளார்.

மேலும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.2 லட்சம், காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரம் வழங்கப்படும் எனப் பிரதமரும் அறிவித்திருந்தார்.

## விவாகரத்து முடிவா?
# வதந்திகளுக்கு நயன்தாரா பதில்

**சென்னை, ஜூலை 11-**

விக்னேஷ் சிவனும் நயன்தாராவும் விவாகரத்தா என்பது குறித்து அவர் விளக்கம் அளித்துள்ளார்.

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகையாக வலம் வருபவர் நடிகை நயன்தாரா. இவர் பிரபல இயக்குனர் விக்னேஷ் சிவனை காதலித்து கடந்த 2022-ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். இஅவர்கள் வாடகைத் தாய் மூலமாக உயிர் மற்றும் உலகம் என்ற 2 ஆண் குழந்தைகளை பெற்றுக் கொண்டனர்.

இவர்கள் இருவரும் தங்கள் இரண்டு மகன்கள் உடன் அதிக நேரம் செலவிடுகின்றனர். அதனை போட்டோ எடுத்து சமூக வலைத்தளங்களிலும் வெளியிட்டு வருகின்றனர். இதற்கிடையில், கடந்த சில நாட்களாகவே சமூக வலைதளங்களில் விக்னேஷ் சிவனும் நயன்தாராவும் விவாகரத்து முடிவில் இருப்பதாக நிறைய வதந்திகள் பரவின.

இந்த நிலையில், வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் நடிகை நயன்தாரா தனது ஸ்டைலில் பதிலளித்துள்ளார். அதாவது, தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் விக்னேஷ் சிவனுடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தைப் பகிர்ந்து, "எங்களை பற்றி வரும் வதந்திகளுக்கு ரியாக்ஷன் இது தான்" என நகைச்சுவையாகப் பதிலளித்துள்ளார்.

இதன் மூலம், இருவருக்கும் இடையே எந்தப் பிரச்னையும் இல்லை என்பதை நயன்தாரா உறுதிபடுத்தியிருக்கிறார்.

# அன்புமணி இனி என் பெயரை பயன்படுத்தக் கூடாது: ராமதாஸ்

**கும்பகோணம்,ஜூலை 11-**

'என் பேச்சை கேட்காதவர்கள் என் பெயரை பயன்படுத்தக்கூடாது. வேண்டுமானால் என் இனிஷியலைப் போட்டுக் கொள்ளலாம்' என பாமக நிறுவனர் ராமதாஸ் காட்டமாக தெரிவித்துள்ளார்

கும்பகோணத்தில் நேற்று பாட்டாளி மக்கள் கட்சி - வன்னியர் சங்க தஞ்சாவூர், திருவாரூர் மாவட்ட பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. பாமக கவுரவத் தலைவர் ஜி.கே.மணி தலைமை வகித்தார். வன்னியர் சங்க மாநில தலைவர் பு.தா. அருள்மொழி, தலைமை நிலைய செயலாளர் அன்பழகன், பொதுச் செயலாளர் முரளி சங்கர், தஞ்சாவூர் வடக்கு மாவட்டச் செயலாளர் ம.க.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலை வைத்தனர்.

இந்தக் கூட்டத்தில் பேசிய பாமக நிறுவனர் தலைவர் ராமதாஸ், " என் பேச்சை கேட்காதவர்கள் என் பெயரை பயன்படுத்தக் கூடாது. வேண்டுமானால் என் இனிஷியலை போட்டுக் கொள்ளலாம். தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்பார்கள்.

நாட்டின் வளர்ச்சிக்கும், வீட்டின் வளர்ச்சிக்கும் உழைப்பவர்கள் பாட்டாளி மக்கள் தான். பூம்புகாரில் ஆக.10-ம் தேதி நடைபெறும் மகளிர் மாநாட்டுக்கு அனைவரும் வர வேண்டும். சுமார் 2 லட்சம் மகளிர் கலந்து கொள்வார்கள்" என்றார் ராமதாஸ்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ராமதாஸ், "தமிழ் நாட்டிலேயே முதன்முறையாக நடைபெறும் பொதுக்குழு கூட்டம் சிறப்பாக பிரம்மாண்டமாக இருக்கிறது. எனது பேச்சை கேட்காதவர்கள் என் பெயரை போடக் கூடாது. ஆனால், இனிஷியல் மட்டும் போடலாம். மாவட்ட செயலாளர் ம.க.ஸ்டாலினுக்கு, அன்புமணி மீது உள்ள பாசம் போகாததால், அவரது புகைப்படத்தை கூட்ட மேடையில் வைத்துள்ளார்" என்றார்ராமதாஸூம், அன்புமணியும் இணைந்து செயல்பட்டால் கண்ணுக்கு அழகு என பா.ஜ.க. மூத்த தலைவர் ஹெச். ராஜா கூறியிருப்பது குறித்து கேட்டபோது, " அவர் அவருடைய ஆசையை கூறியுள்ளார்" என்றார். இந்த ஆசை நிறைவேறுமா என செய்தியாளர்கள் கேட்டதற்கு, "போக போகத் தெரியும்" என்ற பாடலை பாடியபடி அவர் எழுந்து சென்றார்.

# ரூ.50 நாணயம் வெளியீடா? மத்திய அரசு விளக்கம்

**புதுடெல்லி, ஜூலை 11-**

ரூ.50 நாணயத்தை வெளியிடும் அறிவிப்பு இல்லை என்று டெல்லி உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ரூ.50 நாணயத்தை அறிமுகப்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை என்று மத்திய நிதியமைச்சகம் டெல்லி உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில், 2022ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கி நடத்திய ஆய்வில், நாணயங்களின் எடை, அளவு உள்ளிட்ட காரணிளால் பயனர்கள் பெரும்பாலும் அவற்றைத் தவிர்ப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

மக்கள் அதிக எடை கொண்ட நாணயங்களை விட எளிமையான ரூபாய் நோட்டுகளையே விரும்புவதால், தற்போது ரூ.50 நாணயத்தை அறிமுகப்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை என்று மத்திய நிதியமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது

# அரியானாவில் நிலநடுக்கம்; டெல்லியிலும் நில அதிர்வு

**புதுடெல்லி, ஜூலை 11-**

அரியானாவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதை தொடர்ந்து டெல்லியிலும் நில அதிர்வு ஏற்பட்டது.

அரியானாவின் ஜாஜ்ஜர் மாவட்டத்துக்கு அருகே நேற்று காலையில் 4.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் டெல்லியின் பல்வேறு பகுதிகளில் கடுமையான நில அதிர்வு உணரப்பட்டது. நேற்று காலை 9.04 மணிக்கு ஏற்பட்ட நிலநடுக்கம் அரியானாவின் ஜாஜ்ஜருக்கு வடகிழக்கே 3 கிமீ தொலைவிலும், டெல்லிக்கு மேற்கே 51 கிமீ தொலைவிலும் மையம் கொண்டிருந்தது. இந்த நிலநடுக்கம் 10 கிமீ ஆழத்தில் ஏற்பட்டதாக தேசிய நிலநடுக்கவியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அரியானாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் டெல்லி மற்றும் என்சிஆர் பகுதிகளில், நேற்று காலை கடுமையான நில அதிர்வுகள் உணரப்பட்டது, இதனால் மின்விசிறிகள் மற்றும் பிற வீட்டுப் பொருட்கள் குலுங்கியதால் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். நொய்டா பகுதியிலும் நில அதிர்வு உணரப்பட்டது. அரியானாவில், குருகிராம், ரோஹ்தக், தாத்ரி, பரிதாபாத், சோனிபட் மற்றும் பகதூர்கர் ஆகிய இடங்களில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஜாஜ்ஜரில் இருந்து சுமார் 200 கி.மீ தொலைவில் மேற்கு உத்தர பிரதேசத்தில் உள்ள மீரட் மற்றும் ஷாம்லி வரை நில அதிர்வுகள் உணரப்பட்டது.

# சிறையில் மரணம் அடைந்தவர்களின் குடும்பத்தினரை சந்திக்க விஜய் திட்டம்?

**சென்னை, ஜூலை 11-**

தமிழ்நாட்டில் கடந்த 4 ஆண்டுகளில் காவல்நிலையங்களில் மரணம் அடைந்தவர்களின் குடும்பங்களை சந்திக்க தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மடப்புரம் அஜித்குமார் கொலையை கண்டித்து வருகிற ஞாயிற்றுக்கிழமை த.வெ.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. ஆர்ப்பாட்டத்திற்கு முன்னதாக காவல்நிலையங்களில் மரணம் அடைந்தவர்களின் குடும்பங்களை சந்திக்க விஜய் திட்டமிட்டுள்ளார்.

மேலும், காவல் நிலையங்களில் மரணம் அடைந்த 20-க்கும் மேற்பட்டவர்களின் குடும்பங்களை சந்திக்கும் விஜய் அவர்களுக்கு நிதியுதவி வழங்க உள்ளதாக கூறப்படுகிறது. விசாரணையின் போது காவலர்களால் கடுமையான தாக்குதலுக்கு உள்ளானவர்களையும் விஜய் சந்திப்பார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

# திருவாரூரில் சமூகநீதி விடுதியை நேரில் ஆய்வு செய்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்



**திருவாரூர், ஜூலை 11-**
திருவாரூரில் சமூகநீதி விடுதியை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

தற்கால இளம் சந்ததியினர் அனைவரும் சாதி வேறுபாடின்றி ஒன்றிணைந்து, எதிர்கால தமிழ்ச் சமுதாயத்தை, சமத்துவச் சமுதாயமாகக் கட்டமைத்திட, பல்வேறு சாதி சமயப் பிரிவுகளின் பெயர்களின்கீழ் செயல்பட்டு வரும் மாணவர் விடுதிகளின் பெயர்களை மாற்றிட தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. அதன்படி பல்வேறு துறைகளின்கீழ் செயல்பட்டு வரும் ஏழை மாணவர்களுக்கான பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளை 'சமூகநீதி விடுதிகள்' என்று பெயர் மாற்றம் செய்து தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் 7.7.2025 அன்று உத்தரவிட்டார்.

"சமூகநீதி விடுதி" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதையொட்டி அதனை பார்வையிடும் நோக்கில், தமிழ்நாடு முதல்வர் நேற்று (10.7.2025) அரசு விழா நடைபெறும் திருவாரூர், எஸ்.எஸ்.நகர் செல்லும் வழியில், கிடாரங்கொண்டானில் அமைந்துள்ள கல்லூரி மாணவர்களுக்கான சமூகநீதி விடுதி மற்றும் கல்லூரி மாணவியர்களுக்கான சமூகநீதி விடுதிகளுக்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, சமூகநீதி விடுதியில் உள்ள நூலகம், சமையலறை உணவருந்தும் அறை, பொருள் இருப்பு அறை ஆகியவற்றை தமிழ்நாடு முதல்-அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் விடுதியில் உள்ள மாணவ, மாணவியர்களிடம் அவர்களின் தேவைகள், விடுதியில் உள்ள வசதிகள், வழங்கப்படும் உணவின் தரம் ஆகியவை குறித்தும், உரிய நேரத்தில் உணவு வழங்கப்படுகிறதா என்பது குறித்தும், வார்டன்கள் பணிக்கு வருவது குறித்தும் கேட்டறிந்தார்.

அத்துடன் சமையலறைக்கு சென்று உணவு தயாரிக்கும் பணியாளர்களிடம், காய்கறிகள், மளிகைப் பொருட்கள் இருப்பு குறித்து கேட்டறிந்து, சுகாதாரமான முறையில் உணவு தயாரித்து வழங்கிட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

## 27 நாடுகளின் உயரிய விருதுகள்:
# பிரதமர் நரேந்திர மோடிக்கு பவன் கல்யாண் வாழ்த்து



**புதுடெல்லி, ஜூலை 11-**
பிரேசில், கானா, நமீபியா உட்பட 27 நாடுகளின் உயரிய விருதுகளைப் பெற்றிருப்பதன் மூலம் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை சேர்த்திருக்கிறார் என்று ஆந்திரப் பிரதேச துணை முதல்வரும் ஜனசேனா கட்சித் தலைவருமான பவன் கல்யாண் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பவன் கல்யாண் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "பிரதமர் நரேந்திர மோடி 5 நாடுகள் சுற்றுப் பயணத்தின்போது பிரேசில், கானா, நமீபியா ஆகிய நாடுகளின் மிக உயர்ந்த சிவில் விருதுகளைப் பெற்றுள்ளார். இதன் மூலம், இதுவரை 27 உலக நாடுகளின் மிக உயரிய சிவில் விருதுகளைப் பிரதமர் மோடி பெற்றுள்ளார்.

கடந்த 2014-ம் ஆண்டு நாட்டின் பிரதமராக பொறுப்பேற்ற நரேந்திர மோடி, உலகின் பெரிய மற்றும் சிறிய நாடுகளுடன் வலுவான ராஜதந்திர உறவுகளை வளர்த்து வருவதன் மூலம், இந்தியாவின் உலகளாவிய நிலையை மாற்றியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குத் தலைமை உலகின் 4-வது பெரிய பொருளாதாரமாக இந்தியாவை மாற்றியுள்ளது. அதோடு, ஆபரேஷன் சிந்தூர் போன்ற முக்கிய தருணங்களில் சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் மரியாதையையும் நாடு பெற்றது.

தனது அரிய சாதனைகள் மூலம் பிரதமர் நரேந்திர மோடி ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை சேர்க்கிறார்.

மிக உயர்ந்த தலைமைப் பண்பு மற்றும் ராஜதந்திர திறன்கள் மூலம் ஒரு முன்மாதிரியான அரசியல் தலைவராக பிரதமர் மோடி திகழ்கிறார்." என பாராட்டு தெரிவித்துள்ளார்.

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கில்
# ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 5 பேர் சென்னை ஐகோர்ட்டில் ஆஜர்

**சென்னை, ஜூலை 11-**
நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், 5 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகினர்.

கடலூர் மாவட்டம் கூத்தப்பாக்கம் கிராமத்தில் உள்ள தேவநாத சுவாமி கோவிலுக்கு சொந்தமான 3.40 ஏக்கர் நிலத்தில், அமைந்துள்ள தனியார் பள்ளியை (புனித ஜோசப் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி) அப்புறப்படுத்தக் கோரி பா.ஜ.க.வின் ஆன்மிக மற்றும் கோவில் மேம்பாட்டுப் பிரிவின் மாநில செயலாளர் வினோத் ராகேந்திரன் பொது நல வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், பள்ளியை அப்புறப்படுத்தி, கோவில் நிலத்தை கோவிலுக்கு ஒப்படைக்க வேண்டும் எனவும், பள்ளிக்கு மாற்று இடம் ஒதுக்க வேண்டும் எனவும் கடந்த 2024-ம் ஆண்டு உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவை அமல்படுத்தவில்லை எனக் கூறி தமிழக வருவாய் துறை செயலாளர் அமுதா, பள்ளிக் கல்வித்துறை செயலாளர் மதுமதி, இந்து சமய அறநிலைய துறை செயலாளர் சந்திரமோகன், அறநிலையத் துறை ஆணையர் ஸ்ரீதர், கடலூர் மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில் குமார், அறநிலைய துறை இணை ஆணையர் பரணிதரன், கோவில் செயல் அலுவலர் வெங்கடகிருஷ்ணன் ஆகியோருக்கு எதிராக வினோத் ராகவேந்திரன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், 5 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உள்ளிட்ட அரசு அதிகாரிகளை நேரில் ஆஜராகி விளக்கமளிக்க உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கு தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம் மற்றும் நீதிபதி சுந்தர் மோகன் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தபோது, தமிழக வருவாய் துறை செயலாளர் அமுதா, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் மதுமதி, இந்து சமய அறநிலைய துறை செயலாளர் சந்திரமோகன், அறநிலையத் துறை ஆணையர் ஸ்ரீதர், கடலூர் மாவட்ட ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில் குமார், அறநிலையத் துறை இணை ஆணையர் பரணிதரன், கோயில் செயல் அலுவலர் வெங்கடகிருஷ்ணன் ஆகியோர் நேரில் ஆஜராகி இருந்தனர். அவர்கள் தரப்பில், நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தாததற்கு மன்னிப்பு கோரி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

தமிழக அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ. ரவீந்திரன், புவனகிரி தாலுகா பெரியப்பட்டு கிராமத்தில் பள்ளிக்கு 4.73 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதையடுத்து, பள்ளிக்கு வேறு இடம் ஒதுக்கக்கோரி அரசுக்கு விண்ணப்பிக்கும்படி பள்ளி நிர்வாகத்திற்கு அறிவுறுத்திய நீதிபதிகள், அதனை பரிசீலிக்கும்படி வருவாய்த்துறை செயலாளர் உத்தரவிட்டு, அதிகாரிகளின் மன்னிப்பை ஏற்று நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முடித்து வைத்தனர்.

# காரைக்காலில் மாங்கனித் திருவிழா: மாங்கனிகளை வீசி வழிபட்ட பக்தர்கள்



**காரைக்கால், ஜூலை 11-**
காரைக்காலில் நடந்த திருவிழாவில், பக்தர்கள் மாங்கனிகளை வீசி வழிபாடு நடத்தினர்.

காரைக்கால் கைலாசநாத சுவாமி, நித்ய கல்யாணப் பெருமாள் கோவில்களில் தேவஸ்தானத்துக்கு உட்பட்ட காரைக்கால் அம்மையார் கோவிலில் ஆண்டு தோறும் மாங்கனித் திருவிழா சிறப்பான வகையில் நடத்தப்பட்டு வருகிறது.

நடப்பாண்டுக்கான விழா கடந்த 8-ம் தேதி ஆற்றங்கரை சித்தி விநாயகர் கோவிலில் இருந்து மாப்பிள்ளை அழைப்பு வைபவத்துடன் தொடங்கியது. நேற்று முன்தினம் காலை அம்மையார் கோயிலில் புனிதவதியார்- பரமதத்தர் திருக்கல் யாணம், இரவு கைலாசநாதர் கோயிலில் பிச்சாண்டவர் வெள்ளை சாற்றி புறப்பாடு நடைபெற்றது. நேற்று அதிகாலை கைலாசநாதர் கோவிலில் பிச்சாண்டவர், பஞ்சமூர்த்திகளுக்கு மகா அபிஷேகம் செய்யப்பட்டு, மகா தீபாராதனைக் காட்டப்பட்டது.

தொடர்ந்து பரம தத்தர் காசுக்கடை மண்டபத்துக்கு (கடைத்தெரு பொய்யாத மூர்த்தி விநாயகர் கோவில்) வரும் நிகழ்வு நடைபெற்றது. பின்னர் சிறப்பு மிக்க நிகழ்வான பிச்சாண்டவர் வீதியுலா நடைபெற்றது. இதனை யொட்டி சிவபெருமான் பிச்சாண்டவர் கோலத்தில் கையில் மாங்கனியுடன், கைலாசநாதர் கோவில் வாயிலில் பவழக்கால் சப்பரத்தில் எழுந்தருளினார். பின்னர் காலை 9.30 மணியளவில் கைலாசநாதர் கோவில் வாயிலிருந்து வீதியுலா புறப்பாடு தொடங்கியது. வீதியுலாவில் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கையில் மாங்கனி, பட்டு வஸ்திரம், பூக்கள் உள்ளிட்டவற்றுடன் தொடர்ந்து நீண்ட வரிசையில் நின்று இறைவனை தரிசித்து சென்றனர்.

வீதியுலாவின் போது சாலைகள், வீடுகள், கடைகள் மற்றும் மாடிப் பகுதிகளில் கூடியிருந்த ஏராளமான பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடனை செலுத்தும் விதமாக மாங்கனிகளை வீசி இறைத்து இறைவனை வழிபட்டனர். அந்த மாங்கனிகளை இறைவனுக்குப் படைக்கப்பட்ட பிரசாதமாகக் கருதி, ஏராளமான பக்தர்கள் அவற்றை பிடித்து தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் சென்றனர்.

இதனால் திருமணத் தடை, குழந்தை பேறின்மை போன்ற பல இன்னல்கள் நீங்கி தங்கள் வேண்டுதல்கள் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. இவ்விழாவில் புதுச்சேரி அமைச்சர் பி.ஆர்.என்.திருமுருகன், புதுச்சேரி டி.ஐ.ஜி. சத்திய சுந்தரம், முதுநிலை காவல் கண்காணிப்பாளர் லட்சுமி சவுஜன்யா, நிர்வாக அதிகாரி (கோவில்கள்) கு.அருணகிரிநாதன், கைலாசநாதர் கோவில் நிர்வாக அதிகாரி ஆர்.காளிதாசன், உபயதாரர்கள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு இறைவனை தரிசித்தனர். மாலை காரைக்கால் அம்மையார் கோயிலில் அமுது படையல் நிகழ்வு நடைபெற்றது.

## கோவை குண்டுவெடிப்பு வழக்கு:
# 28 ஆண்டுகளுக்கு பிறகு தேடப்பட்ட நபர் கைது

**கோவை, ஜூலை 11-**
கோவை குண்டுவெடிப்பு வழக்கில் 28 ஆண்டுகளாக தேடப்பட்டு வந்தவர், கர்நாடகா மாநிலத்தில் கைது செய்யப்பட்டார்.

கோவையில் கடந்த 1998-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14-ம் தேதி தொடர் குண்டு வெடிப்பு சம்பவம் நடைபெற்றது. 12-க்கும் மேற்பட்ட இடங்களில் நடந்த இந்த வெடிகுண்டு சம்பவத்தை, தடை செய்யப்பட்ட அல் - உம்மா பயங்கரவாத அமைப்பினர் அரங்கேற்றினர். இந்த தாக்குதல் சம்பவத்தில் 58 பேர் உயிரிழந்தனர். 200-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக அப்போதைய கோவை மாநகர காவல் துறையினர் வழக்கு பதிந்து ஏராளமானோரை கைது செய்தனர்.



கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இவ்வழக்கில் தொடர்புடைய பலர், தற்போதும் கோவை மத்திய சிறையில் உயர் பாதுகாப்பு பிரிவில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் கோவை குண்டு வெடிப்பு வழக்கில் முக்கிய குற்றவாளியாக இருந்தவர் சாதிக் என்ற ராஜா என்ற டெய்லர் ராஜா. சுமார் 28 ஆண்டுகளுக்கும் மேலாக தலைமறைவாக இருந்து வந்தார்.

இந்த நிலையில் எஸ்.பி.பத்ரி நாராயணன் தலைமையிலான கோவை மேற்கு மண்டல தீவிரவாத தடுப்பு பிரிவு போலீஸார் பல்வேறு தகவலின் அடிப்படையில் டெய்லர் ராஜா, கர்நாடகா மாநிலத்தில் தலைமறைவாக இருப்பதை கண்டறிந்தனர். இதையடுத்து தனிப்படை போலீஸார் கர்நாடகா மாநிலத்துக்குச் சென்று அங்கு தலைமறைவாக இருந்த டெய்லர் ராஜாவை கைது செய்தனர். அதைத் தொடர்ந்து அவரை கோவைக்கு அழைத்து வந்தனர். கோவை காவலர் பயிற்சி பள்ளி வளாகத்தில் வைத்து அவரிடம் போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# பா.ஜ.க. கூட்டணியில் இருந்து வெளியேறும் சூழல் இல்லை: புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி

**புதுச்சேரி, ஜூலை 11-**
புதுச்சேரியில் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேறும் சூழல் ஏதுமில்லை என முதல்வர் ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதனுக்கும், முதல்வர் ரங்கசாமிக்கும் இடையே சில விஷயங்களில் கருத்து வேறுபாடு மோதலானது. முதல்வர் ரங்கசாமி பரிந்துரையை ஏற்காமல் துணைநிலை ஆளுநர் தன்னிச்சையாக சீனியாரிட்டி அடிப்படையில் இருந்த டாக்டர் செவ்வேலை சுகாதாரத்துறை இயக்குநராக நியமித்தார். இச்சம்பவம் மோதலாக மாறியது. அதனால் கடந்த செவ்வாய்க்கிழமையன்று சட்டப்பேரவையில் இருந்து முதல்வர் கோபமாக புறப்பட்டார். முதல்வர் பதவியில் நீடிக்க வேண்டுமா என பா.ஜ.க. அமைச்சர் நமச்சிவாயத்திடமும், பேரவைத் தலைவர் செல்வத்திடமும் கேள்வியும் எழுப்பினார்.

அதனால் முதல்வர் ரங்கசாமி தனது பதவியை ராஜினாமா செய்ய வாய்ப்புள்ளதாக கட்சியினரிடம் தகவல் பரவியது. மோதல் முடிவுக்கு வராமல், 'சட்டப்பேரவைக்கு வரப்போவதில்லை' என முதல்வர் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டனர்.

பா.ஜ.க. தரப்பு இச்சூழலை கட்சி மேலிடத்துக்கு தெரியப்படுத்தியது. அதையடுத்து பா.ஜ.க. மேலிடபொறுப்பாளர் நிர்மல்குமார் சுரானா நேற்று புதுச்சேரி வந்தார். கோரிமேட்டில் உள்ள ரங்கசாமி வீட்டுக்கு மேலிடப் பொறுப்பாளர் நிர்மல்குமார் சுரானா, அமைச்சர் நமச்சிவாயம், பா.ஜ.க. மாநிலத்தலைவர் ராமலிங்கம் ஆகியோர் வந்தனர். வீட்டின் முதல்தளத்தில் அனைவரும் ஆலோசனை நடத்தினர். முதல்வர் ரங்கசாமி தனது கருத்துகளை மேலிட பொறுப்பாளரிடம் தெரிவித்தவுடன் அதை மேலிடத்துக்கு சொல்வதாக உறுதி தந்த பிறகு செய்தியாளர்களை முதல்வர் ரங்கசாமி சந்தித்தார். அப்போது முதல்வர் கூறுகையில், "தேசிய ஜனநாயகக்கூட்டணி அரசு வரும் 2026 தேர்தலில் புதுச்சேரியில் வென்று ஆட்சி அமைக்கும். நிர்வாக ரீதியில் ஆளுநர், அரசு இடையே பிரச்சினை வரும். மாநில அந்தஸ்து கிடைக்கும் வரை பிரச்சினை களை பேசி சரி செய்வோம். பா.ஜ.க. எப்போதும் எனக்கு அழுத்தம் தந்தது இல்லை. பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேறும் சூழல் ஏதுமில்லை .மாநில அந்தஸ்தை புதுச்சேரியில் உள்ள அனைத்து கட்சியினரும் வலியுறுத்தவேண்டும். இது தொடர்பாக பிரதமரை எப்போது வேண்டுமானாலும் சந்திப்போம்" என்றார்.

# சூதாட்ட செயலி விளம்பரம்: 29 நடிகர்களுக்கு சிக்கல்



**புதுடெல்லி, ஜூலை 11-**
சட்டவிரோத சூதாட்ட செயலி விளம்பரங்களில் நடித்த நடிகர்கள் பிரகாஷ் ராஜ், விஜய் தேவரகொண்டா, மஞ்சு லட்சுமி, பிரணீதா உட்பட 29 நடிகர்கள் மீது அமலாக்கத் துறை வழக்குப் பதிவு செய்துள்ளது.

சூதாட்ட செயலிகளுக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. அதேநேரத்தில், சில செயலிகள் திறமையை அடிப்படையாகக் கொண்ட விளையாட்டுக்கள் என்ற பெயரில் சூதாட்டங்களில் ஈடுபடுவது கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாறு கண்டறியப்பட்ட ஜங்லீ ரம்மி, ஜீட்வின், பாரிமேட்ச், லோட்டஸ் 365 போன்ற செயலிகளுக்கு ஆதரவாக விளம்பரங்களில் நடித்ததாக நடிகர்கள் பிரகாஷ்ராஜ், விஜய தேவரகொண்டா, ராணா டகுபதி, மஞ்சு லட்சுமி, பிரணீதா, நிதி அகர்வால், தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடக பிரமுகர்கள் அனன்யா நாகெல்லா, ஸ்ரீமுகி, வர்ஷினி சவுந்தரராஜன், வசந்தி கிருஷ்ணன் உள்ளிட்ட 29 பேர் மீது பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறை வழக்குகளை பதிவு செய்துள்ளது.

இவர்களுக்கு எதிராக விசாகப்பட்டினம், சூர்யா பேட்டை, சைபராபாத், மியாப்பூர், பஞ்சகுட்டா ஆகிய 5 இடங்களில் தனித்தனியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதை அடுத்து அமலாக்கத் துறை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அமலாக்கத் துறையால் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள நபர்கள் விரைவில் விசாரணைக்கு அழைக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவர்களில் சிலர் தாங்கள் எந்த தவறும் செய்யவில்லை என அறிக்கை வெளியிட்டுள்ளனர். செயலியின் சட்டவிரோத செயல்பாடு தெரிந்ததும் ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

# கடலூர் ரயில் விபத்து: தனியார் பள்ளிக்கு கல்வித் துறை நோட்டீஸ்

**கடலூர், ஜூலை 11-**
கடலூர் ரயில் விபத்தில் 3 மாணவர்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக தனியார் பள்ளிக்கு கல்வித் துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது. கடலூர் அருகே செம்மங்குப்பத்தில் நேற்று முன்தினம் பள்ளி வேன் மீது ரயில் மோதி விபத்து ஏற்பட்டது.

இதில் பள்ளி மாணவர்கள் 3 பேர் உயிரிழந்தனர். ஒரு மாணவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்நிலையில் தனியார் பள்ளி வேனில் உதவியாளர் இல்லாமல் இயக்கப்பட்டது தெரியவந்தது. இதையடுத்து பள்ளிக் கல்வித்துறை சார்பில் கடலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் எல்லப்பன் அறிவுறுத்தலின் பேரில் மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) மோகன், தனியார் பள்ளிக்கு சம்பவத்தன்று வேனியில் உதவியாளர் இல்லாதது ஏன் என்று கேட்டு நேற்று நோட்டீஸ் வழங்கியுள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ரயில்வே துறையின் 6 பேர் கொண்ட விசாரணை குழு விபத்து நடந்த செம்மங்குப்பம் பகுதியில் உள்ள வீடுகளில் இருந்தவர்களிடம் விபத்து பற்றி கேட்டறிந்தனர். இதைத்தொடந்து கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்ற அக்குழுவினர் அங்கு டாக்டர்களிடம் விசாரணை நடத்தினர்.

இதற்கிடையில் அங்கு சிகிச்சை பெற்று வந்த மாணவர் விஷ்வேஸ் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். வேன் ஓட்டுநர் சங்கர் மேல்சிகிச் சைக்காக புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

# மீனவர்களுக்கு மானியம் மறுப்பதா? தமிழக அரசுக்கு விஜய் கண்டனம்

**சென்னை, ஜூலை 11-**
"மீனவ நண்பர்கள் தங்களின் படகுகளில் தமிழக வெற்றிக் கழகம் என்று குறிப்பிட்டிருந்தால் அவர்களுக்கு மானியம் வழங்க மறுப்பதா?" என தி.மு.க. அரசுக்கு த.வெ.க. தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'திருநெல்வேலி மாவட்டம், கூட்டப்புளி மீனவ கிராமத்தைச் சேர்ந்த எங்கள் கழகத் தோழர்கள், தங்களின் வாழ்வாதாரமாய் விளங்கும் மீன்பிடி தொழிலுக்கான தங்களின் படகுகளைத் தமிழக வெற்றிக் கழக என்ற பெயருடன் பயன்படுத்தி வந்துள்ளனர்.

தங்களின் படகுகளில் தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரை எழுதியிருந்ததால் அரசு சார்பில் வழங்கப்படக்கூடிய மானியத்தை வழங்க முடியாது என்று, அரசாங்க ஊழியர்கள் படகுகளின் உரிமையாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

இது போன்ற எதேச்சதிகார அராஜக ஆட்சியின் வாயிலாக தமிழக வெற்றிக் கழகத்தை முடக்க நினைத்தால் அது ஒருபோதும் நடக்காது.

மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை நோக்கிய, கச்சத்தீவை மீட்பது அல்லது அதைக் குத்தகைக்கு எடுப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு தமிழக வெற்றிக் கழகம் உள்பட, பல்வேறு தரப்பில் இருந்தும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இருந்தபோதிலும் இது தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிலையில் படகுகளில் எழுதியுள்ள தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரை அழித்தால்தான் மானியம் வழங்கப்படும் என்று மீனவர்களை மிரட்டும் தி.மு.க. அரசு, அதே படகுகளில் தி.மு.க. என்ற பெயரையோ அல்லது தி.மு.க.வின் கொடியையோ பயன்படுத்துபவர்களிடம் இவ்வாறு கூறுமா? அரசு இனி வரும் காலங்களில் இது போன்ற செயல்களை முற்றிலுமாகக் கைவிட வேண்டும்.

இல்லையெனில், த.வெ.க. போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



புதினுக்கு எது பொருந்துமோ அது இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கும் பொருந்தும். உக்ரைனில் வாழும் அந்நாட்டவர்களை ரஷ்யாவால் அழித்துவிட முடியாது. அதேபோல், பாலஸ்தீனியரை அவர்கள் தாய் மண்ணிலிருந்து இஸ்ரேலால் அழிக்க முடியாது.
- ப.சிதம்பரம்



சென்னை மாநிலக் கல்லூரியில் புதிய பாடப்பிரிவுகளை நடத்துவதற்காக திறந்த நிலை பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர்களை கூடுதல் பணி செய்ய அனுப்பும் ஆணையை தமிழக அரசு ரத்து செய்ய வேண்டும். அரசு கல்லூரிகளில் காலியாக உள்ள உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் அனைத்தையும் உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- அன்புமணி



அ.தி.மு.க. திராவிட கட்சி அல்ல. ஜெயலலிதாவை பழித்து பேசியவர்களுடன் அ.தி.மு.க கூட்டணி வைத்துள்ளது. கடந்த 4 ஆண்டுகால போலீஸ் காவலில் மரணம் அடைந்தவர்களை த.வெ.க. தலைவர் விஜய் சந்திப்பதாக வரும் செய்திகளை பார்த்தால் அவர் அரசியல் செய்வதாக தெரிகிறது. அவரது அரசியல் வேறு, எங்கள் அரசியல் வேறு.
- செல்வப்பெருந்தகை



விஜய் அரசியலுக்கு வந்துள்ளார். எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர்., ஜெயலலிதா மாதிரி இருக்க வேண்டும். இப்போது சினிமாவில் இருந்து வருபவர்கள் 'டைம் பாஸ்' அரசியலுக்காக வருகிறார்கள். விஜய் அப்படி இருக்கக்கூடாது. தனக்கு பின்னால் வரும் மக்களுக்காக எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் இறங்கி போராட வேண்டும்.
- ரோஜா

# தஞ்சாவூர் மாவட்டத்தில் குரூப்-4 தேர்விற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

## கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடைபெற்றது



**தஞ்சாவூர்,ஜூலை.11-** தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படவுள்ள ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - IV (தொகுதி IV பணிகள்) பதவிகளுக்கான எழுத்துத் தேர்வு 12.07.2025 அன்று முற்பகல் நடைபெற உள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 43,517 தேர்வர்கள் அனைத்து வட்டங்களுக்கும் உட்பட்ட பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் அமைக்கப்பட்டுள்ள 155 தேர்வு மையங்களில் தேர்வு எழுத உள்ளனர். தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ள தேர்வுக் கூட முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு (Chief In vigilator) தேர்வு நாளன்று பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து கலெக்டர் அவர்களால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) ரேணுகாதேவி, பள்ளி மற்றும் கல்லூரி தேர்வுகூட முதன்மை கண்காணிப்பாளர்கள், ஆய்வு அலுவலர்கள், இயங்குகுழு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# நாகப்பட்டினம் மாவட்ட தூய்மைப் பணியாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

## தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய தலைவர் தலைமையில் நடைபெற்றது



**நாகப்பட்டினம்,ஜூலை.11-** நாகப்பட்டினம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டு கழகம் (தாட்கோ) சார்பில் தூய்மைப் பணியாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி தலைமையில் நடைபெற்றது. உடன் கலெக்டர் ப.ஆகாஷ், , கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.நாகை மாலி , தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய துணை தலைவர் கனிமொழி பத்மநாபன் , மாநில நல வாரிய உறுப்பினர் தி.அரிஷ் குமார் ஆகியோர் உள்ளனர்.

இவ்விழாவில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய தலைவர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியமானது தூய்மை பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களுக்கு தேவையானவற்றை நிறைவேற்றுவதற்காக தொடங்கப்பட்டது. தூய்மை பணியாளர்கள் பணி நேரத்தில் கையுறை, காலுறை, முக கவசம் போன்றவைகளை அணிய வேண்டும். தங்களது பாதுகாப்பை முதலில் உறுதி செய்து பணியில் ஈடுபட வேண்டும். தூய்மை பணியாளர்களுக்கு போதுமான உபகரணங்கள் வழங்குமாறும், தூய்மை பணியாளர்களின் மருத்துவ சோதனை செய்துகொள்ளவும், மேலும் இந்த நலவாரியம் மூலம் சமூகநலத்திட்ட உதவிகள் தூய்மை பணிபுரிவோர் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களுக்கு விபத்து மற்றும் இயற்கை மரணம், ஈமச்சடங்கு, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் கண் கண்ணாடி ஆகியவற்றிற்காக உதவித்தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது என தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய தலைவர் தெரிவித்தார்.

அதனைதொடர்ந்து இந்த விழாவில் நாகப்பட்டினம், வேதாரண்யம் ஆகிய நகராட்சி மற்றும் வேளாங்கண்ணி, கீழ்வேளூர், திட்டச்சேரி, தலைஞாயிறு போன்ற பேரூராட்சிகளிலிருந்து தூய்மை பணியாளர்கள் கலந்துகொண்டனர். இவ்விழாவில் தாட்கோ சார்பில் தூய்மை பணிபுரிவோர் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களுக்கு விபத்து மற்றும் இயற்கை மரணம், ஈமச்சடங்கு, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை என மொத்தம் 42 பயனாளிகளுக்கு ரூ.1,29,500/- மதிப்பீட்டில் உதவித்தொகைக்கான காசோலையினையும், 100 தூய்மை பணியாளர்களுக்கு தூய்மை பணியாளர் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டையினையும், திட்டச்சேரி பேரூராட்சியில் தூய்மை பணியாளர்கள் சங்க சொசைட்டி மூலம் தூய்மை பணியாளர்கள் சங்க உறுப்பினர்கள் 19 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ. 9,50,000/- மதிப்பீட்டில் கடன் உதவித்தொகைக்கான காசோலையினையும் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் வ.பவணந்தி, மாவட்ட மேலாளர் (தாட்கோ) க.சக்திவேல் கலியபெருமாள், நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் டி.லீனா சைமன், வேதாரண்யம் நகராட்சி ஆணையர் த.சித்ரா சோனியா, வேளாங்கண்ணி, கீழ்வேளூர், திட்டச்சேரி, தலைஞாயிறு பேரூராட்சி செயல்அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், தூய்மை பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்ட தூய்மைப் பணியாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகள்

## தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய தலைவர் வழங்கினார்



**மயிலாடுதுறை,ஜூலை.11-** மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட தாட்கோ சார்பில் தூய்மைப் பணியாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய தலைவர் டாக்டர்.திப்பம் பட்டி.வெ.ஆ றுச் சாமி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், காமநல்லூர் ஊராட்சியை சேர்ந்த தூய்மைக் காவலர் கலையரசி மற்றும் தரங்கம்பாடி வட்டம், காட்டுச்சேரி ஊராட்சியை சேர்ந்த தூய்மைக் காவலர் சாந்தி, ஆகியோரது மகள்களுக்கு திருமண உதவித்தொகை தலா ரூ.5,000-மும், மயிலாடுதுறை மற்றும் சீர்காழி நகராட்சியில் பணிபுரியும் 50 தூய்மைக்காவலர்களுக்கு தூய்மைப் பணியாளர் நல வாரிய அட்டையும், 50 தூய்மைக்காவலர்களுக்கு மருத்துவக் காப்பீடு அட்டைகளையும் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய தலைவர் டாக்டர்.திப்பம் பட்டி.வெ.ஆ றுச் சாமி வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியின்போது, மாவட்ட கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் , தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய துணைத்தலைவர் செ.கனிமொழி பத்மநாபன் , மாநில வாரிய உறுப்பினர் தி.அரிஷ்குமார்;, மாவட்ட வருவாய் அலுவலர் .உமாமகேஷ்வரி, மாவட்ட தாட்கோ மேலாளர் .செல்வகுமார்;, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கீதா மற்றும் அரசு அலுவலர்கள், தூய்மை பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**போக்குவரத்து விதிகளை மதிக்கவும்**

# பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.4.86 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகள்

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அடிக்கல் நாட்டினார்



**பெரம்பலூர்,ஜூலை.11-** பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நல்லறிக்கை, காடூர், புதுவேட்டைக்குடி, கைப்பெரம்பலூர், கி.குடிக்காடு, பழைய அரசமங்கலம், வடக்கலூர், காருகுடி, சின்ன பரவாய், எழுமூர், பீல்வாடி, சித்தளி ஆகிய கிராமங்களில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் (10.07.2025) ரூ.4.86 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வுகளில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன் தரும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் கிராமப்புற பகுதிகளுக்கு பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க ஒவ்வொரு கிராமங்களிலும் நேரடியாக மக்களை சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டு அறிந்து பூர்த்தி செய்து வருகிறோம் இது மக்களுக்கான அரசு அதன் அடிப்படையில் தான் கூட பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் பொது மக்களுக்காக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் கனிமங்கள் மற்றும் சுரங்க நிதியின் கீழ் காடூர், புதுவேட்டைக்குடி, வடக்கலூர் ஆகிய இடங்களில் தலா ரூ.9.15 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி, முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நல்லறிக்கை முதல் இலுப்பையூர் வரை ரூ.99.90 லட்சம் மதிப்பீட்டிலும், நல்லறிக்கை முதல் புதுக்குடிசை வரை ரூ.60 லட்சம் மதிப்பீட்டிலும், புதுவேட்டைக்குடி – பென்னகோணம் சாலை முதல் கீழக்குடிக்காடு வரை ரூ.92.80 லட்சம் மதிப்பீட்டிலும், கிழுமத்தூர் குடிக்காடு முதல் கைப்பெரம்பலூர் வரை ரூ.48.00 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்படுத்தும் பணியினையும், அயோத்திதாசர் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதுவேட்டைக்குடியில் ரூ.16.45 லட்சம் மதிப்பீட்டில் 470 மீட்டர் தூரமுள்ள ஆதிதிராவிடர் மயான சாலையினை மேம்படுத்தும் பணியினையும், காருகுடி ஆதிதிராவிடர் தெருவில் ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் வீட்டு குழாய் இணைப்பு வழங்கும் பணியினையும், சித்தளி ஊராட்சியில் பீல்வாடி முதல் ஆதிதிராவிடர் மயானம் வரை ரூ.16.10 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியினையும்,15-வது நிதிக்குழு மானியத்தின் மூலம் காருகுடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.5.92 லட்சம் மதிப்பீட்டில் சுகாதார வளாகம் அமைக்கும் பணியும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஊராட்சி பொது நிதியின் கீழ் புதுவேட்டைக்குடி ஊராட்சி மாரியம்மன் கோவில் முதல் ஆதிதிராவிடர் தெரு வரை ரூ.3.50 லட்சம் மதிப்பீட்டில் பைப்லைன் அமைக்கும் பணி, கைப்பெரம்பலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.5.92 லட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுகாதார வளாகம் மற்றும் ரூ.4.96 லட்சம் மதிப்பீட்டில் ஆண்கள் சுகாதார வளாகம் அமைக்கும் பணியினையும், கிழுமத்தூர் குடிக்காடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.5.92 லட்சம் மதிப்பீட்டில் சுகாதார வளாகம் மற்றும் ரூ.4.96 லட்சம் மதிப்பீட்டில் ஆண்கள் கழிவறை அமைக்கும் பணியினையும், பழைய அரசமங்களத்தில் 80 குடும்பங்களுக்கு பைப்லைன் மற்றும் வீட்டு குழாய் இணைப்பு வழங்கும் பணியினையும், சின்னபரவாய் கிராமத்தில் செங்கமலை வீடு முதல் சின்னப்பொண்ணு வீடு வரை ரூ.7.50 லட்சம் மதிப்பீட்டில் கழிவு நீர் கால்வாய் மற்றும் கவர் ஸ்லாப் அமைக்கும் பணியினையும், எழுமூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் தலா ரூ.4.16 லட்சம் மதிப்பீட்டில் கழிப்பறை அமைக்கும் பணியினையும்,

பீல்வாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலா ரூ.4.16 லட்சம் மதிப்பீட்டில் பெண்கள் மற்றும் ஆண்கள் கழிப்பறை அமைக்கும் பணியினையும், சித்தளி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ரூ.4.16 லட்சம் மதிப்பீட்டில் ஆண்கள் கழிப்பறை அமைக்கும் பணியினையும், சித்தளி ஊராட்சி பிசி மயான பாதையை ரூ.16.00 லட்சம் மதிப்பீட்டில் தார்சாலையாக மேம்படுத்தும் பணியினையும், சித்தளி ஊராட்சி நடுத்தெருவில் சுதா வீடு முதல் மாலதி வீடு வரை ரூ.6.15 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி என மொத்தம் ரூ.4.86 கோடி மதிப்பீட்டில் 26 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த காலத்திற்குள் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இவ்வாறு தெரிவித்தார்.

பின்னர் போக்குவரத்து மற்றும் மின்சார துறை அமைச்சர் குன்னம் பேருந்து பணிமனைக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்திடும் விதமாக ஊராட்சி பொது நிதியில் ரூ.6.58 லட்சம் மதிப்பீட்டில் புதிய பைப் லைன் மற்றும் தரைத்தளம் நீர்த்தேக்க தொட்டி அமைப்பதற்கு பேருந்து பணிமனையில் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வுகளில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் துரைசாமி, மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் மரகதவல்லி குன்னம் துணை மேலாளர் சுரேஷ் பார்த்திபன், கிளை மேலாளர்கள் எட்வர்ட் கென்னடி, குணசேகரன், வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறிவழகன், சேகர், குன்னம் வட்டாட்சியர் சின்னதுரை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திருமருகலில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட விண்ணப்பம் வழங்கும் பணி தொடக்கம்



**நாகப்பட்டினம்,ஜூலை.11-** நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் விண்ணப்பம் வழங்கும் பணி வியாழக்கிழமை தொடங்கி வைக்கப்பட்டது. திருமருகல் ஒன்றியத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் வரும் 16-ஆம் தேதி புதன்கிழமை நடைபெற உள்ள நிலையில் திருமருகல் மருங்கூர் நெய்க்குப்பை எரவாஞ்சேரி உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் விண்ணப்பம் வழங்கும் பணி நடைபெற்றது.

முன்னதாக திருமருகல் ஊராட்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணன், சுப்பிரமணியன் (கிராம ஊராட்சி) ஆகியோர் கலந்து கொண்டு விண்ணப்பம் வழங்கும் பணியை தொடங்கி வைத்தனர்.இந்தத் திட்டத்தின் கீழ் தன்னார்வலர்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் நேரடியாக சென்று முகாம் நடைபெறும் நாள் இடம் குறித்த விவரங்கள் அங்கு வழங்கப்பட உள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள் சேவைகளை விவரித்து அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள் தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதுடன் தகவல் கையேடு மற்றும் விண்ணப்பத்தையும் வழங்கினர்.

மேலும் முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெற தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் விண்ணப்பம் அளிக்கலாம் அதற்கான விண்ணப்பம் உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் மட்டுமே வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 - நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்திட்டம் குறித்த விபரங்களை பொதுமக்களுக்கு முறையாக தெரிவிப்பதற்காக உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் தன்னார்வலர்கள் மூலம் வீடு வீடாகச் சென்று விண்ணப்பங்கள் மற்றும் தகவல் கையேடு வழங்கும் பணி நடைபெறுகிறது. நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலக மேலாளர் கலைவாணன் ஊராட்சி செயலாளர் மணிமாறன் தன்னார்வலர் கவிதா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள் கணக்கெடுப்பு பணி

## கலெக்டர் பொ.ரத்தினசாமி துவக்கி வைத்தார்



**அரியலூர்,ஜூலை.11-** அரியலூர் மாவட்டம், அரியலூர் கல்லங்குறிச்சி சாலையில் உள்ள மாருதி நகரில் உள்ள குடியிருப்பு பகுதியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் முன்களப் பணியாளர்கள் மூலம் மாற்றுத்திறனாளிகள் குறித்த கணக்கெடுப்பு பணியினை கலெக்டர் பொ.இரத்தினசாமி, (10.07.2025) துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு உரிமைகள் திட்டமானது மாற்றுத்திறாளிகள் நலத்துறையின் கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படக்கூடிய சிறப்புத் திட்டமாகும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது எளிதாக அணுகுதல், சமவாய்ப்பு வழங்குதல், ஒருங்கிணைத்தல் ஆகிய மூன்று குறிக்கோள்களைக் கொண்டு கடைக்கோடியில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான அனைத்து அரசு நலத்திட்ட உதவிகளும் அவர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே எளிதில் கிடைத்திட வழிவகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அதனடிப்படையில், தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் (சம்ருதி தொண்டு நிறுவனம்) முன்களப் பணியாளர்கள் மூலம் அரியலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் குறித்த கணக்கெடுப்பு பணிகள் நடைபெறவுள்ளது. அதன்படி அரியலூர் கல்லங்குறிச்சி சாலையில் உள்ள மாருதி நகர் குடியிருப்பு பகுதியில் மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கு நேரடியாக சென்று கணக்கெடுப்பு மேற்கொள்ளும் பணியினை கலெக்டர் இன்றையதினம் துவக்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் அரசு உதவிகளை எளிதாக பெறுவதற்காக உரிமைகள் திட்டம் செயல்;படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர பகுதிகளை உள்ளடக்கிய 6 வட்டார ஒருங்கிணைந்த சேவை மையங்களும், உட்கோட்ட அளவில் 2 ஒருங்கிணைந்த சேவை மையங்களும் ஏற்படுத்தப்பட்டு சேவை மையங்கள் மூலமாக மாற்றுத்திறனாளிகளுக்கான பல்வேறு சேவைகள் வழங்கப்பட உள்ளது.

அதன்படி ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் முதற்கட்டமாக 80 முன்களப்பணியாளர்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலமாக பணி நியமனம் செய்யப்பட்டு கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த முன்களப்பணியாளர்கள் மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கே சென்று கணக்கெடுத்தல், மறுவாழ்வு உதவிகள் பெறுவதற்கு மதிப்பீடு செய்தல், பிறத்துறை மூலமாக வழங்கப்படும் உதவிகளை பெற்று வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுதல், மறுவாழ்வு உதவிகள் கிடைத்திட பரிந்துரை செய்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

மேலும், முன்களப் பணியாளர்கள் அரியலூர் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் நலனிற்காக முழுமையான ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும் எனவும், தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் மாற்றுதிறனாளிகள் அனைவருக்கும் முறையாக சென்று சேரும் வகையில் எந்தவொரு மாற்றுத்திறனாளிகளும் விடுபடாத வகையில் கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கலெக்டர் பொ.இரத்தினசாமி, தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மஞ்சுளா. இதர அரசு அலுவலர்கள், முன்களப் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தேர்தல் ஆணையம் மூலம் என்ஆர்சியை கொண்டு வர துடிக்கும் ஒன்றிய பாஜக அரசு

## தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் கடும் கண்டனம்

**திருவாரூர்,ஜூலை.11-** தேர்தல் ஆணையம் மூலம் என்ஆர்சியை கொண்டு வர துடிக்கும் ஒன்றிய பாஜக அரசு - தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.இது குறித்து அதன் மாநில பொதுச்செயலாளர் முஜீபுர் ரஹ்மான் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவித்திருப்பதாவது,பிஹாரில் இன்னும் சில மாதங்களில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது.இந்த சூழலில் கொல்லைப்புறமாக ஆட்சியைப் பிடிக்க,பாஜக சூழ்ச்சி வலையை பிண்ண ஆரம்பித்துள்ளது.அதன் ஒரு நகர்வாக, பிஹாரில் சட்டவிரோதமாக பங்களாதேஷை சேர்ந்தவர்கள் ஊடுருவியுள்ளார்கள் என வதந்தியை பரப்பி,அம்மாநில தேர்தலுக்கு முன்பு அனைத்து வாக்காளர்களும் இந்தியர்கள் தானா என்பது நிரூபிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை விதைத்து வருகிறது. பிஹாரிலுள்ள 7.73 கோடி வாக்காளர்களும், ஜூலை 26ம் தேதிக்குள் தங்களது கணக்கெடுப்பு படிவங்களை சமர்ப்பிக்க வேண்டும் என தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.தேர்தல் ஆணையத்தின் உதவியோடு சிறும்பான்மையினர் தலித், பழங்குடியினர் என 3 கோடி வாக்காளர்களை நீக்கும் சதி திட்டத்தை பாஜக அரங்கேற்றி வருகிறது. குறிப்பிட்டவர்களின் வாக்குரிமையை பறிக்கும் சதித்திட்டமாகவே இதை பார்க்க வேண்டியுள்ளது.அரைகுறையாக இந்த வேலையை செய்து, பல குளறுபடிகளை அரங்கேற்றி தங்களுக்கு வேண்டாத வாக்காளர்களை கழித்து, குறிப்பிட்ட சாராரை மட்டும் சேர்ப்பதற்காகவே தேர்தல் ஆணையத்தின் மூலம் பாஜக இத்திட்டத்தை கொண்டுவந்துள்ளது.வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கு தேர்தல் ஆணையம் விதித்த புதிய நிபந்தனைகள் அனைத்தும் கைவிடப்பட வேண்டும் என தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.அரசியல் கட்சிகளும், சமூக செயற்பாட்டாளர்களும், பொது மக்களும் ஜனநாயக முறையில் இதை எதிர்க்க வேண்டும் என தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.பாஜக என் ஆர்சியை நடைமுறைபடுத்த முன் வந்தால் இந்தியா கடுமையான ஜனநாயக வழி போராட்டங்களை சந்திக்கும் என்பதை ஒன்றிய அரசிற்கு எச்சரிக்கையாக சொல்லிக் கொள்கிறோம். இவ்வாறு மாநில பொதுச் செயலாளர் முஜீபுர் ரஹ்மான் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளார்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்

## கலெக்டர் மு.அருணா நேரில் ஆய்வு



**புதுக்கோட்டை,ஜூலை.11-**

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் மேற்கொள்ளப் பட்டுவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை, கலெக்டர் மு.அருணா, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கிராமப்புறங்களில் சாலை வசதி, மின் வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி, பள்ளி கட்டடங்கள், அங்கன்வாடி மையக் கட்டடங்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அதன்படி, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், பூவரசகுடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.9.96 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் சுற்றுச்சுவர் கட்டுமானப் பணியினையும், வேப்பங்குடி ஊராட்சியில் சிறுபாசன ஏரிகள் சீரமைத்தல் திட்டத்தின் கீழ் ரூ. 6.9 லட்சம் மதிப்பீட்டில் வெண்டன்குளம் தூர்வாரும் பணியினையும், மணிப்பள்ளம் வேங்கடகுளம் சாலை முதல் வம்பன் பகுதி சாலை வரை முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.4.48 இலட்சம் மதிப்பீட்டில் 150 மீட்டர் தூரம் உள்ள சாலையினை பலப்படுத்தும் பணியினையும், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப் பட்டது. எனவே, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இத்தகைய வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடர்புடைய அரசு அலுவலர்கள் விரைவாகவும், தரமாகவும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் எனவும் கலெக்டர் மு.அருணா தெரிவித்தார். இந்த ஆய்வுகளின் போது, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரமேஷ், முத்துராமன், உதவிப் பொறியாளர்கள் யோகநாதன், முகமது ரபீக், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அருண்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.




**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கரூர் திருமாநிலையூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில் 58.25 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 13 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, 3.35 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 18,332 பயனாளிகளுக்கு 162.22 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செ. ஜோதிமணி, கே.இ.பிரகாஷ். சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், ஆர். இளங்கோ, க. சிவகாமசுந்தரி, கலெக்டர் மீ. தங்கவேல், மேயர் க. கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர் உடனிருந்தனர்.**

# திருவாரூர் மாவட்டத்தில் அங்கன்வாடி ஊழியர்களுக்கு வேலைக்கு உரிய ஊதியம், பணி நிரந்தரம் செய்ய வேண்டும்

## ஊழியர்கள் கோரிக்கை

**திருவாரூர்,ஜூலை.11-**

தமிழ்நாட்டில் சமூகநலத் துறை மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் அங்கன்வாடிகள் எனப்படும் குழந்தைகள் பாதுகாப்பு மையங்கள் செயல்படுகின்றன. இம் மையங்களில் 2 வயது 5 வயதுவரையிலான குழந்தைகள் சேர்க்கப்படுகின்றனர், இதில் பணிபுரியும் ஊழியர்களில் பணியாளர் ஆசிரியையாக உள்ளார். உதவியாளர், சமையல் செய்யும் வேலையை செய்து வருகிறார்.இம்மையங்கள் ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்கள் தவிர வாரத்தின் ஆறுநாட்கள் செயல்படும்,காலை 8.30 மணிக்கு திறக்கப்பட்டு மாலை 4 மணி வரை செயல்படும்.பணியாளர், உதவியாளர் இருவரும் பணி நேரம் முழுவதும் மையத்திலிருக்க வேண்டும்.குழந்தைகளுக்கு உணவு, பயனாளிகளுக்கு இணை உணவு வழங்குதல் பணி நடைபெற்று வருகிறது.இதில் உதவியாளரை விட பணியாளர்களுக்கு பணிச்சுமை அதிகம் குழந்தைகளுக்கு தினமும் முன்பருவ கல்வி கற்பிப்பித்தல் முதல் தினமும் 12 எண்ணிக்கைக்கு மேலான பதிவேடுகள் பராமரித்தல், அங்கன்வாடிகள் மூலம் பயன்பெறும் பயனாளிகளை வீடுகளுக்கு நேரடியாக சென்று கற்பணிகள்,பாலூட்டும் தாய்மார்களுக்கு தடுப்பூசி, ஊட்டசத்து,தன் சுத்தம் குறித்து ஆலோசனை வழங்குதல் பிறந்து 6- மாதம் 2- வயது வரையிலான குழந்தைகளின் எடை உயரம் கண்டறிந்து பதிவு செய்து ஊட்டசத்து குறித்து ஆலோசனை வழங்குதல் செய்கிறார்கள்.

மேலும் இரண்டு முறை மாதாந்திர ஆய்வு கூட்டம் செல்லுதல்,சுகாதாரத்துறை மூலம் நடத்தும் போலியோ சொட்டுமருந்து முகாம்,குடற்புழுநீக்கும் மாத்திரை வழங்குதல்,வைட்டமின் ஏ திரவம் வழங்குதல் பணி செய்தல், குறிப்பாக பயனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாக சென்று செல்போன் (போஷான் டிராக்கர்) ஆப் மூலம் போட்டோ எடுத்து அப்டேட் செய்ய வேண்டும்.இதில் ஆதார் எண்ணை இணைத்து ஒடிபி வாங்கினால் மட்டுமே இணை உணவு கிடைக்க வாய்ப்புள்ளது இதில் பல பிரச்சனைகள் ஏற்படுகிறது. பயனாளிகள் ஒடிபி வழங்க மறுக்கின்றனர், மேலும் அரசு மூலம் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட செல்போன் பழையது பழுதடைந்து விட்டது தற்போது 5 ஜி போன் இல்லை. இதனால் பணியாளர்கள் மிகுந்த மன உலைச்சலும், உடல் பாதிப்பும் ஏற்படுகிறது, கையிலிருந்து செலவு செய்யவேண்டிய நிலையுள்ளது, இவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மிக மிக குறைவு முப்பதாண்டுகளுக்கு மேலாக பணிபுரிபவர்கள் அதிகபட்சம் இருபத்தையாயிரம் வரை மட்டுமே பெறுகின்றனர், ஆனால் இவர்கள் செய்யும் பணிக்கு ஐம்பதாயிரம் முதல் என்பதாயிரம் வரை கொடுக்க வேண்டும். அதிக நேர பணி குறைவான ஊதியம் பணிநிரந்தரமும் இல்லை, ஓய்வுதியமும் இல்லை, ஓய்வுக்கு பிறகு குறைவான தொகையே கிடைக்கிறது இதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஊழியர்கள் கேட்டுகொண்டுள்ளனர்.

# மயிலாடுதுறை நகராட்சியில் மாற்றுதிறனாளி நகர்மன்ற நியமன உறுப்பினருக்கான மனு

## ஆணையரிடம் வழங்கினர்



**மயிலாடுதுறை,ஜூலை.11-**

மயிலாடுதுறை நகராட்சியில் மாற்றுத்திறனாளிகள் நகர் மன்ற நியமன உறுப்பினர் பதவிக்கு தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தின் சார்பாக மயிலாடுதுறை ஒன்றிய தலைவர் U.ராஜேந்திரன் விருப்ப மனுவை மாற்றுத்திறனாளிகள் முன்னிலையில் நகராட்சி ஆணையரிடம் வழங்கினார். இதில் சங்கத்தின் மாவட்ட செயலாளர் எம்.புருஷோத்தமன் மாவட்ட துணை செயலாளர் எம்.சொக்கலிங்கம் மயிலாடுதுறை ஒன்றிய செயலாளர் என்.செபஸ்திகன் ஒன்றிய துணை செயலாளர் S.சுந்தர பாண்டியன், .எல்எம். சாருமதி, மாவட்ட குழு உறுப்பினர் பி.கார்த்திக் நகர பொறுப்பாளர் கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



**தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் குரூப் - IV தேர்வு நடைபெறுவதையொட்டி முன்னேற்பாடு பணிகள் குறித்து திருச்சிமாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் கலெக்டர் வே.சரவணன் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் ர.ராஜலட்சுமி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணப்ரியா, தேர்வாணைய குழு உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் உடன் உள்ளனர்.**

# மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் தேசிய மீன் விவசாயிகள் தினம் கொண்டாட்டம்



**நாகப்பட்டினம்,ஜூலை.11-**

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் தேசிய மீன் விவசாயிகள் தினம் வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மீனவர்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாத்திடவும் மற்றும் மேம்படுத்திடவும்ஆண்டுதோறும் தேசிய மீன் விவசாயிகள் தினம் ஜீலை 10- ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. அதன்படி திருமருகல் ஒன்றியம் கட்டுமாவடி ஊராட்சிக்குட்பட்ட முடிகொண்டான் ஆற்றில் மீன் குஞ்சு விரலிகள் (கட்லா, ரோகு மிர்கால்) இருப்பு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் இணை இயக்குநர் சர்மிளா தேவி, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை (மண்டலம்) நாகப்பட்டினம், உதவி இயக்குநர் ஜெயராஜ், ஆய்வாளர் ஜெயஸ்ரீ மீன்வள மேற்பார்வையாளர்கள் கண்ணன், தினேஷ் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்

### ENROLMENT NOTICE

After Ten days of the publication of this notice and within Three months thereafter, I, M.DEVANESAN S/o.P.Mohandoss Aged 23 Years, residing at No.46, Crescent Nagar, Chennai Salai, Koranattukaruppur, Kumbakonam,- 612 501, Thanjavur DT. intend having my enrollment as an Advocate moved before The bar Council of Tamilnadu Bar council Buildings, High Court Campus,Chennai – 104.

Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

M.DEVANESAN

### ENROLMENT NOTICE

After Ten days of the publication of this notice and within Three months thereafter, I, J.RAJARAJESWARI D/o.M.Jayakumar Aged 22 Years, residing at No.3/158, Middle Street, Adavathur, Trichy District- 620 102 intend having my enrollment as an Advocate moved before The bar Council of Tamilnadu Bar council Buildings, High Court Campus,Chennai – 104.

Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

J.RAJARAJESWARI

### ENROLMENT NOTICE

After Ten days of the publication of this notice and within Three months thereafter, I, SAKTHINILA.B D/o.Balamurugan Aged 22 Years, residing at No.636, South Street, Kanguzhi, Ayyur Post, Ariyalur Dist pin-608 901 intend having my enrollment as an Advocate moved before The bar Council of Tamilnadu Bar council Buildings, High Court Campus, Chennai – 104.

Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

SAKTHINILA.B

### ENROLLMENT NOTICE

After ten days of the publication of this notice and within Three months there after, I, **SRIRAM .P, S/o. Packirisamy,** aged 23 years, permanently residing at **No.1-36, Nadu Theru, Thirukkalambur, Kudavasal (Tk), Thirukkalambur, Thiruvarur District - 613705, Tamil Nadu** Intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**SRIRAM .P**

### ENROLLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within Three months thereafter. I, S.VINOTHKUMAR, S/o. SANTHIYAPPAN, Aged 34 years, Permanently residing at, No 3/28C SIVAN KOVIL STREET, VISWAMBAL SAMUTHIRAM( SOUTH), BALAKRI SHNAMP ATTI(TP), THURAIYUR, TIRUCHIRAPPALLI, TAMILNADU 621003. Intend to have my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai - 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

S.VINOTHKUMAR

### நகை ஏல அறிவிப்பு

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா, திருமுல்லைவாசல், எண்.5/76, மெயின் ரோடு "சந்தன்" நகை அடகு கடையில் 02.01.2021 முதல் 30.12.2023 வரை உள்ள அடகு வைக்கப்பட்டு காலம் கடந்தும் மீட்கப்படாதிருக்கும் தங்கம், வெள்ளி மற்றும் உள்ள வகையறாக்களை சீர்காழி RDO அவர்களின் KDIS No.1941/2025/A-4 உத்தரவுப்படி 16.07.2025 மதியம் 2.00 மணி முதல் என்னால் பகிரங்க ஏலம் விடப்படும். இந்த அறிவிப்பு நகை அடகு வைத்தவர்களுக்கும், இறந்தவர்களின் வாரிசுகளுக்கும் வெளிநாடு சென்றவர்களுக்கும் பொருந்தும்.

**M.ரவிச்சந்திரன்,**
மாவட்ட ஏலதாரர்,
2A, பெரிய தைக்கால் தெரு,
மயிலாடுதுறை.

### நகை ஏல அறிவிப்பு

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்கா, மங்கைநல்லூர் எண்.4/49 மெயின் ரோடு "ஸ்ரீஏழுமலையான்" நகை அடகு கடையில் 21.08.2020 முதல் 301.12.2023 வரை உள்ள அடகு வைக்கப்பட்டு காலம் கடந்தும் மீட்கப்படாதிருக்கும் தங்கம், வெள்ளி மற்றும் உள்ள வகையறாக்களை மயிலாடுதுறை RDO அவர்களின் KDIS.No.1080/2025/B-1 உத்தரவுப்படி 23.07.2025 காலை 10.00 மணி முதல் என்னால் பகிரங்க ஏலம் விடப்படும். இந்த அறிவிப்பு நகை அடகு வைத்தவர்களுக்கும், இறந்தவர்களின் வாரிசுகளுக்கும் வெளிநாடு சென்றவர்களுக்கும் பொருந்தும்.

**M.ரவிச்சந்திரன்,**
மாவட்ட ஏலதாரர்,
2A, பெரிய தைக்கால் தெரு,
மயிலாடுதுறை.

### நகை ஏல அறிவிப்பு

மயிலாடுதுறை, 6/7, தூக்கணாங்குளம், தட்டாரத் தெரு ரயிலடியில் இயங்கி வரும் "N.நாகரெத்தினம் அம்மாள் பேங்கர்ஸ்" நகை அடகு கடையில் 13.06.2019 முதல் 18.01.2024 வரையில் அடகு வைத்து மீட்கப்படாத காலம் கடந்த பவுன், வெள்ளி, பித்தளை வகையறாவை மயிலாடுதுறை R.D.O. அவர்களின் KDIS 2135/2025/B-1 உத்தரவுபடி வரும் 28.07.2025 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு என்னால் மேற்படி கட்டிடத்தில் பகிரங்க ஏலம் விடப்படும் இந்த அறிவிப்பு நகை அடகு வைத்தவர்களுக்கும், இறந்தவர்களின் வாரிசுகளுக்கும் வெளிநாடு சென்றவர்களுக்கும் பொருந்தும்.

**M.சேதுராமன்,**
திருவாரூர் மாவட்ட ஏலதாரர்,
தர்மர் கோவில் தெரு,
திருவாரூர்.
செல்: 97908 69636.

### வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம்
த.ப. 294/2025
நாள் : 03.06.2025

தேவேந்திரன்,
த/பெ.சட்டநாதன்,
227, சிவன்கோவில் தெரு,
இலந்துறை,
கும்பகோணம்.
– மனுதாரர்

– எதிர் –

உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர்
கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை "சட்டநாதன்" என்பவர் கடந்த 25.12.1990 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

தேவேந்திரன்,
மனுதாரர், கும்பகோணம்.

### கோட்டாட்சியர் வருவாய் நீதிமன்றம், மன்னார்குடி
C.M.P.No.163/2025

மோகன், த/பெ. ஆரான்
1/185, அரிஜன தெரு,கர்ணாவூர்
மன்னார்குடி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம் ....மனுதாரர்

–எதிர்–

வட்டாட்சியர், மன்னார்குடி
...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரர் தாயார் "ஆண்டாள் அம்மாள்" என்பவர் கடந்த 30.04.2021 ஆம் தேதி 185, கீழதெரு, கர்ணாவூர், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம், முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

S.விஜயன் B.A., B.L.,
வழக்கறிஞர், மன்னார்குடி

### மாண்புமிகு கோட்டாட்சியர் நீதிமன்றம்,மன்னார்குடி
C.M.P.No.164/2025

ராஜசேகரன், த/பெ. கருணாநிதி,
122, நடுத்தெரு, வாஞ்சியூர் கிராமம்,
மன்னார்குடி வட்டம்,
திருவாரூர் மாவட்டம் ....மனுதாரர்

–எதிர்–

வட்டாட்சியர் மன்னார்குடி
...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரர் தாத்தா "சின்னையன்" என்பவர் கடந்த 10.06.1975 ஆம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

S.விஜயன் B.A., B.L.,
வழக்கறிஞர், மன்னார்குடி

### உயர்திரு. உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி
C.M.P.No.5/2025

காந்தி, த/பெ.தங்கையன்,
22, வ.உ.சி நகர், எம்.ஜி.ஆர் நகர்,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை – 600078 ....மனுதாரர்

–எதிர்–

1. வட்டாட்சியர் நீடாமங்கலம்
2. சார்பதிவாளர்,மன்னார்குடி
...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரரின் தந்தை "தங்கையன்" என்பவர் கடந்த 06–04–1989 ஆம் தேதி மெயின் ரோடு, வடுவூர் புதுக்கோட்டை, நீடாமங்கலம் தாலுக்கா, என்ற முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர்கள் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீதான விசாரணை எதிர்வரும் 22–07–2025 ஆம் தேதி அன்று வாய்தா போடப் பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா தேதி அன்று காலை 10.30 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

M. பன்னீர்செல்வம் M.A., B.L.,
வழக்கறிஞர், மன்னார்குடி

### வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் அவர்கள், மயிலாடுதுறை

ரேவதி,
க/பெ.அச்சுதன்,
1/43A.மேலத்தெரு,
குறிச்சிகிராமம்,
மயிலாடுதுறை
– மனுதாரர்

வட்டாட்சியர், குத்தாலம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது மகள் செல்வி. "ஆசிகா" த/பெ.அச்சுதன் என்பவருக்கு பிறப்பு சான்று வேண்டல் .மேற்படி விலாசத்தில் மயிலாடுதுறை மாவட்டம் குறிச்சி கிராமம், மேலத் தெரு என்பவர் கடந்த 03.11.2011 ஆண்டு மேற்படி விலாசத்தில் பிறந்ததை பதிவு செய்யக் கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

ரேவதி,
மனுதாரர், மயிலாடுதுறை.

### திருவாரூர் மாவட்ட நீதிமன்றம்,
I.A.No.3/2024 in Unfiled A.S.No. /2024

கலியமூர்த்தி.
– மனுதாரர்

– எதிர் –

குப்பம்மாள்,
க/பெ.கந்தசாமி புள்ளவராயர்,
அய்யம்பேட்டை,
செட்டிசத்திரம்,
நீடாமங்கலம் தாலுக்கா.
– 2–ம் எதிர்மனுதாரர்

மனுதார் கொடுத்த அறிவிப்பு

மேற்படி நம்பரில் மனுதாரர் மன்னார்குடி சார்பு நீதிமன்ற அ.வ.எண்.92/2010–ல் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் மேல்முறையீடு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேல்முறையீட்டை ஏற்றுக் கொள்ள வேண்டி தாக்கல் செய்த இ.ம.எண்.3/2024 ஆனது சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அதில் 2–ம் எதிர்மனுதாரருக்கு பலமுறை கோர்ட்டு மற்றும் பதிவஞ்சலில் அறிவிப்பு அனுப்பப்பட்டும் சேர்ப்பிக்க முடியாமல் செய்திதாள் விளம்பரத்திற்கு உத்தரவாகி அதன்படி 2–ம் எதிர்மனுதாரர் வருகிற 25.07.2025 அன்று காலை 10.30 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டி வாய்தா போடப்பட்டுள்ளது. இல்லையேல் 2–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை கண்டிப்பாக அறியவும்.

ஆர்.சசிக்குமார், B.A.,B.L.,.
வழக்கறிஞர், திருவாரூர்.

### உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி
த.ப.எண்.166/2025

மதியழகன், (55/2025)
த/பெ.சரவணபவானந்தம்,
4/209, மெயின்ரோடு,
சம்மட்டிக்குடிக்காடு,
உள்ளிக்கோட்டை–1
மன்னார்குடி தாலுக்கா. மனுதாரர்

–எதிர்–

வட்டாட்சியர்
மன்னார்குடி எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரரின் தந்தை வழி தாத்தா ராமசாமி த/பெ.வீரப்பத்தேவர் என்பவர் கடந்த 05.03.2005 ஆம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் வசம் உள்ள இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் ஒரு மாத காலத்திற்குள் சமூகம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது என இதன் மூலம் அறிவிக்கப் படுகிறது.

S. ராஜகோபால் B.A., B.L.,
வழக்கறிஞர் & நோட்டரி பப்ளிக்
செல் : 9345163364. மன்னார்குடி.

### உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி
த.ப.எண். 230/2025

மாயகிருஷ்ணன், (78/2025)
த/பெ.நடராஜன்,
453, தெற்கு தெரு,பேரையூர் –1
மன்னார்குடி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்
மனுதாரர்

–எதிர்–

வட்டாட்சியர், மன்னார்குடி
எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரரின் மகன் திரு.இளமாறன் என்பவர் கடந்த 30.05.1979 ஆம் தேதி மேற்படி முகவரியில் பிறந்ததை எதிர் மனுதாரர் வசம் உள்ள பிறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் ஒரு மாத காலத்திற்குள் சமூகம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது என இதன் மூலம் அறிவிக்கப் படுகிறது.

S. ராஜகோபால் B.A., B.L.,
வழக்கறிஞர் & நோட்டரி பப்ளிக்
செல் : 9345163364. மன்னார்குடி.

### உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி
ந.க.எண். 66/ 2025

பிரபாகரன், த/பெ.சிவஞானம்,
20, வடக்கு வீதி, நீடாமங்கலம் Tk
திருவாரூர் Dt. மனுதாரர்

–எதிர்–

1. வட்டாட்சியர் நீடாமங்கலம்,
2. சார்பதிவாளர் நீடாமங்கலம்
எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரர் தாயார் முத்து லெட்சுமி என்பவர் கடந்த 04–10–2023ஆம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர்கள் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீதான விசாரணை கடந்த 22.07.2025 ஆம் தேதி அன்று வாய்தா போடப்பட்டு, விசாரணை நடந்துள்ளது. இதில் யாருக் கேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா தேதி அன்று காலை 10.30 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

S.சதீஸ்குமார் B.A., B.L.,
வழக்கறிஞர், மன்னார்குடி

### உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி
த.ப.எண்.35/2025

ராஜேந்திரன், த/பெ. காத்தலிங்கம்
3/507, வடக்கு அம்பலக்கார தெரு,
கத்தரிநத்தம்,
பாபநாசம் Tk. தஞ்சாவூர் Dt.
மனுதாரர்

–எதிர்–

வட்டாட்சியர் நீடாமங்கலம்
எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரரின் தாயார் "பாப்பம்மாள்" என்பவர் கடந்த 13.10.2017 ஆம் தேதி 744, தெற்கு தெரு, கீழப்பட்டு, ராயபுரம், நீடாமங்கலம் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் என்ற முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் வசம் உள்ள இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் ஒரு மாத காலத்திற்குள் சமூகம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது என இதன் மூலம் அறிவிக்கப் படுகிறது.

N.கரிகாலன் B.A., B.L.,
வழக்கறிஞர், மன்னார்குடி

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தமிழ்நாடு அரசு

**வேட்டவலம் பேரூராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்**

ந.க.எண். 188 /2025 | **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** | நாள்: 10.07.2025

திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் பேரூராட்சியில் 2025-2026ம் ஆண்டிற்கான 15வது நிதி ஆணைய சுகாதார மானியம் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட பணிக்கு 29.07.2025 செவ்வாய் கிழமை அன்று இணையதளம் **(E-Tender Online Tender)** (இரு உறை) மூலமாக பிற்பகல் 3.00 மணி வரை பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.11.07.2025 முதல் 29.07.2025 பிற்பகல் 3.00 மணி வரை இணையதளம் மூலம் ஒப்பந்தபுள்ளி சம்மந்தமான ஆவணங்களை பதிவிறக்கம் / பதிவேற்றம் செய்து கொள்ளலாம். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 30.07.2025 ம் தேதி பிற்பகல் 3.30 மணியளவில் வருகை தந்துள்ள பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் இணையதளத்தில் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பதிவிறக்கம் செய்து திறக்கப்படும். **(https://tntenders.gov.in)**

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (கோடியில்) | முன்வைப்புத் தொகை 2%(ரூ) | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| 1. | 2 | 3 | 4 | 5 |
| 1. | **வேட்டவலம் பேரூராட்சி ஆரம்ப சுகாதார வளாகத்தில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல்** (Construction of Urban Primary Health Centre in Vettavalam Town Panchayat) | 1.50 | 3,00,000/- | 9 மாதங்கள் |

பணிகள் தொடர்பாக ஒப்பந்ததாரர்கள் கலந்தாய்வு கூட்டம் 17.07.2025 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெறும். ஒப்பந்தப்புள்ளி தொடர்பான நிபந்தனைகளை அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் வேட்டவலம் பேரூராட்சி அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்த தேதியினை ரத்து செய்யவோ அல்லது ஒத்தி வைக்கவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

செ.ம.தொ.இ / 3572 / ஒப்பந்தப்புள்ளி /2025

தலைவர்,
வேட்டவலம் பேரூராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்.

செயல் அலுவலர்,
வேட்டவலம் பேரூராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்.

# இந்திய அணி விரைவில் இலங்கை சுற்றுப்பயணம்

## கோலி, ரோகித் ரசிகர்கள் மகிழ்ச்சி




**மும்பை, ஜூலை 11-**

இலங்கையில் இந்திய அணி சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் விளையாடவுள்ளது.

**ஒத்திவைப்பு...**

இந்திய கிரிக்கெட் அணி வங்காளதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட வெள்ளைப் பந்து தொடரில் ஆட இருந்தது. இந்த தொடர் அடுத்த மாதம் 17ம் தேதி தொடங்க இருந்தது. ஆனால் வங்காளதேசத்தில் நிலவி வரும் அரசியல் சூழல் காரணமாக இந்த தொடரை திட்டமிட்டபடி நடத்த முடியாது என பி.சி.சி.ஐ., வங்காளதேச கிரிக்கெட் வாரியத்திடம் தெரிவித்ததாக கூறப்பட்டது. இதனையடுத்து இந்த தொடர் அடுத்த ஆண்டிற்கு ஒத்தி வைக்கப்பட்டது.

**இலங்கை வாரியம்...**

இந்நிலையில் இந்த தொடர் ரத்தானதை அடுத்து அதே கால கட்டத்தில் இலங்கை கிரிக்கெட் வாரியம் இந்தியாவுக்கு எதிராக தங்கள் நாட்டில் அதே தலா 3 போட்டிகள் டி20 மற்றும் ஒருநாள் (வெள்ளைப்பந்து) தொடர்களை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது. இது குறித்து பி.சி.சி.ஐ.-யிடமும் இலங்கை வாரியம் பேச்சுவார்த்தைக்கு அணுகியதாக தகவல் வெளியாகி உள்ளது.

**விரைவில் அறிவிப்பு...**

கிட்டத்தட்ட இந்த தொடர் நடைபெறுவது உறுதியாகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த தொடர் நடக்கும் பட்சத்தில் இந்திய அணி அடுத்த மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் டி20 தொடரில் விளையாடும். இது குறித்து விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஓய்வு...**

இந்த செய்தி ரோகித் சர்மா மற்றும் விராட் கோலியின் ரசிகர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. ஏனெனில் இந்திய அணியின் நட்சத்திர வீரர்களான விராட் கோலி, ரோகித் சர்மா இருவரும் சர்வதேச டெஸ்ட் மற்றும் டி20 போட்டிகளில் இருந்து விடைபெற்று விட்டதால் ஒருநாள் போட்டிகளில் மட்டுமே விளையாட உள்ளனர்.

**ரசிகர்கள் மகிழ்ச்சி...**

கடந்த ஐ.பி.எல். தொடருக்கு பின் அவர்கள் இருவரையும் களத்தில் காண முடியவில்லை. வங்காளதேச ஒருநாள் தொடர் ரத்தானதால் அவர்கள் இருவரையும் மீண்டும் களத்தில் காணும் நாள் தள்ளி சென்றது. இதன் காரணமாக ரசிகர்கள் சோகத்தில் மூழ்கினர். தற்போது இந்த செய்தி அவர்களிடத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## 3-வது டெஸ்ட் போட்டி:
# ஒரே ஓவரில் நிதிஷ் 2 விக்கெட்டுகள்




**லண்டன், ஜூலை 11-**

3-வது டெஸ்ட்போட்டியில், ஒரே ஓவரில் இங்கிலாந்தின் 2 விக்கெட்டுகளை நிதிஷ் ரெட்டி வீழ்த்தினார்.

**பும்ராவுக்கு இடம்...**

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நேற்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் பேட்டிங் தேர்வு செய்தார். இந்திய அணியில் ஒரே மாற்றமாக பிரசித் கிருஷ்ணாவுக்கு பதிலாக பும்ரா இடம் பிடித்தார்.

**நிதானமாக...**

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரரர்களாக பென் டக்கெட் - ஜாக் கிராலி களமிறங்கினர். வழக்கமாக அதிரடியாக விளையாடும் இங்கிலாந்து அணி இந்த முறை பொறுமையாக விளையாடியது. நிதானமாக இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 43 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் பிரிந்தது.

**ஒரே ஓவரில்...**

இந்த இன்னிங்சின் 14 ஓவரை வீசிய நிதிஷ் ரெட்டி அந்த ஓவரின் 3-வது பந்தில் பென் டக்கெட்டின் (23 ரன்கள்) விக்கெட்டை கைப்பற்றினார். அடுத்து வந்த ஆலி போப் 2 பந்துகளில் எதிர்கொண்ட நிலையில் ஒரு ரன் அடிக்க, கடைசி பந்தை மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் ஆன ஜாக் கிராலி (18 ரன்கள்) எதிர்கொண்டார். அந்த பந்தில் ஜாக் கிராலியின் விக்கெட்டையும் நிதிஷ் ரெட்டி கைப்பற்றி அசத்தினார். இரண்டு பேரும் விக்கெட் கீப்பர் ரிஷப் பண்டிடம் கேட்ச் கொடுத்து வெளியேறினர்.

## முதல்முறையாக இங்கி.,க்கு எதிரான மகளிர்
# டி-20 தொடரை வென்று இந்திய அணி சாதனை




**லண்டன், ஜூலை 11-**

இங்கிலாந்து மகளிருக்கு எதிரான டி20 தொடரினை முதல்முறையாக இந்திய மகளிரணி வென்று இந்திய மகளிர் அணி சாதனை வென்ற சாதனை படைத்துள்ளது.

126 ரன்கள்...

இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்து விளையாடிவரும் இந்திய மகளிரணி 4-ஆவது டி20 போட்டியில் நேற்று முன்தினம் இரவு விளையாடியது. இந்தப் போட்டியில் இங்கிலாந்து முதலில் பேட்டிங் செய்து 126/7 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக சோபியா 22 ரன்கள் அடுத்தார். இந்தியாவின் சார்பில் ராதா யாதவ், ஸ்ரீ சரணி தலா 2 விக்கெட்டுகளை எடுத்தார்கள்.

**தொடரை வென்றது...**

அடுத்து விளையாடிய இந்திய மகளிரணி 17 ஓவர்களில் 127/4 ரன்கள் எடுத்து வென்றது. இதில் அதிகபட்சமாக ஸ்மிருதி மந்தனா 32 ரன்கள் எடுத்தார். 5 போட்டிகள் கொண்ட இந்த டி20 தொடரில் 3-1 என வென்று தொடரை இந்திய மகளிரணி முதல்முறையாக வென்றுள்ளது. கடைசி டி20 ஜூலை 12ஆம் தேதி நடைபெறவிருக்கிறது. அடுத்ததாக ஒரு நாள் போட்டிகள் ஜூலை 16-இல் தொடங்குகின்றன.

**முதல் முறையாக...**

சொந்த மண்ணிலும் சரி இங்கிலாந்திலும் சரி இதற்கு முன்பாக இந்திய மகளிரணி இங்கிலாந்து மகளிருக்கு எதிராக விளையாடிய 6 டி20 தொடர்களில் தோல்வியுற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த வரலாற்று வெற்றிக்கு இந்திய மகளிருக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன. வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட இந்திய மகளிரணியினர் விடியோவை பி.சி.சி.ஐ. வுமன் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## கடலூர் ரயில் விபத்து:
# திருச்சியில் விசாரணையை தொடங்கியது சிறப்பு குழு

**திருச்சி, ஜூலை 11-**

கடலூரில் பள்ளி வேன் மீது ரயில் மோதி 3 மாணவர்கள் பலியான சம்பவத்தில், 11 பேரிடம் திருச்சியில் சிறப்புக்குழுவினர் விசாரணையை தொடங்கியுள்ளனர்.

கடலூர் மாவட்டம் செம்மங்குப்பம் பகுதியில் உள்ள ரயில்வே கேட்டில் பள்ளி வேன் மீது விழுப்புரம்-மயிலாடுதுறை பயணிகள் ரயில் மோதியது. இந்த கோர விபத்தில் மாணவி சாருமதி (16), மாணவர்கள் விமலேஷ் (10), செழியன் (15) ஆகிய 3 பேர் பலியாகினர். கேட் கீப்பர் மது அருந்தியிருந்ததாகவும், கேட்டை மூட மறந்துவிட்டு தூங்கியதாகவும் பொதுமக்கள் குற்றம்சாட்டினர். இதைத்தொடர்ந்து கேட் கீப்பரான மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த பங்கஜ் சர்மா மீது கொலை வழக்கு, மரணத்திற்கு காரணமாக இருத்தல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் 5 வழக்குகள் பதியப்பட்டு, கைது செய்யப்பட்டு சிறையில் அடைத்தனர். இதை தொடர்ந்து தமிழகத்தைச் சேர்ந்த புதிய கேட் கீப்பர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்து குறித்து ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்த விசாரணைக் குழு விசாரணை நடத்தி வந்தனர். பின்னர் திடீர் திருப்பமாக பழைய விசாரணைக் குழு கலைக்கப்பட்டது. இதை தொடர்ந்து திருச்சி ரயில்வே கோட்ட பாதுகாப்பு அதிகாரி மகேஷ் குமார் தலைமையில் 3 பேர் கொண்ட விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவினர் நேற்று முன்தினம் முதல் தங்களது விசாரணையை தொடங்கினர். சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டனர். இதனிடையே விபத்து நடந்த இடத்தில் பணியில் இருந்த கேட் கீப்பர் உள்பட 13 நபர்களை விசாரணைக்கு நேரில் ஆஜராக சம்மன் அனுப்பப்பட்டது. விபத்தில் நேரடியாக தொடர்புடைய கேட் கீப்பர் சிறையிலும், பள்ளி வேன் ஓட்டுநர் மருத்துவமனையிலும் உள்ளனர். ஆகவே மீதமுள்ள 11 பேரிடம் நேற்று திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலகத்தில் விசாரணை நடந்தது.

# ரெய்டின் போது தூங்கிக்கொண்டிருந்த இரண்டு கேட் கீப்பர்கள் சஸ்பெண்ட்

**அரக்கோணம், ஜூலை 11-**

நள்ளிரவில் ரயில்வே அதிகாரிகளின் ரெய்டின் போது தூங்கிக் கொண்டிருந்த 2 கேட் கீப்பர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

கடலூரில் பள்ளி வேன் மீது ரயில் மோதிய கோர விபத்தில் 3 மாணவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். கேட் கீப்பரின் அலட்சியத்தால்தான் இந்த விபத்து நடந்ததாக பொதுமக்கள் குற்றம்சாட்டினர். கேட்கீப்பர் தூங்கிக் கொண்டிருந்ததால் ரயில் வரும்போது, ரயில்வே கேட்டை மூடவில்லை. இதனால் பள்ளி வேன் தண்டவளத்தை கடக்கும்போது விபத்து ஏற்பட்டது என குற்றம்சாட்டப்பட்டது. இதனால் கேட் கீப்பர் கைது செய்யப்பட்டதுடன், சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அரக்கோணம்- செங்கல்பட்டு ரயில் மார்க்கத்தில் நள்ளிரவு அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது இரண்டு கேட் கீப்பர்கள் தூங்கிக் கொண்டிருந்ததை கண்டறிந்தனர். அவர்கள் இருவரையும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

## இந்திய அணியில் ஒரு மாற்றம்

இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்சில் நேற்று தொடங்கியது. இந்த ஆட்டத்திற்கான டாஸ் வென்ற இங்கிலாந்து அணியின் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் பேட்டிங் தேர்வு செய்துள்ளார். அதன்படி இந்தியா முதலில் பந்துவீசியது. இந்த போட்டிக்கான இந்திய அணியில் ஒரே ஒரு மாற்றமாக வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரித் பும்ரா மீண்டும் இடம் பிடித்துள்ளார். இதனால் பிரசித் கிருஷ்ணா அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். குல்தீப் யாதவுக்கு இந்த முறையும் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இரு அணிகளுக்கான பிளேயிங் லெவன் பின்வருமாறு:

இந்தியா: யஷஸ்வி ஜெய்ஸ்வால், கே.எல்.ராகுல், கருண் நாயர், சுப்மன் கில் (கேப்டன்), ரிஷப் பண்ட், நிதிஷ் குமார் ரெட்டி, ரவீந்திர ஜடேஜா, வாஷிங்டன் சுந்தர், ஆகாஷ் தீப், ஜஸ்பிரித் பும்ரா, முகமது சிராஜ்

இங்கிலாந்து: ஜாக் கிராவ்லி, பென் டக்கெட், ஆலி போப், ஜோ ரூட், ஹாரி புரூக், பென் ஸ்டோக்ஸ் (கேப்டன்), ஜேமி சுமித், கிறிஸ் வோக்ஸ், பிரைடன் கார்ஸ், ஜோப்ரா ஆர்ச்சர், சோயிப் பஷீர்.

## மெஸ்ஸி 4 உலக சாதனைகள்



ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்த லியோனல் மெஸ்ஸி (38) அமெரிக்காவின் எம்எல்எஸ் தொடரில் இன்டர் மியாமி அணிக்காக விளையாடி வருகிறார். இந்திய நேரப்படி நேற்று அதிகாலை 5 மணிக்கு தொடங்கிய எம்.எல்.எஸ். போட்டியில் இன்டர் மியாமியும் நியூ இங்கிலாந்து அணியும் மோதின. இந்தப் போட்டியில் இன்டர் மியாமி 2-1 என வென்றது. இதில் 27, 38-ஆவது நிமிஷங்களில் கோல் அடித்து அசத்திய மெஸ்ஸி ஆட்ட நாயகன் விருது வென்றார்.

மெஸ்ஸி படைத்த சாதனைகள்., இந்தப் போட்டியில் அடித்த இரண்டு கோல்களின் மூலம் இளம் வயதில் 870 கோல்களை நிறைவு செய்த முதல் வீரர் என்ற உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார். 18 அடி பாக்ஸுக்கு வெளியே இருந்து 100 கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற உலக சாதனையும் நிகழ்த்தியுள்ளார். அதிவேகமாக 870 கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற சாதனையையும் மெஸ்ஸி தன்வசமாக்கியுள்ளார். எம்எல்எஸ் தொடரில் தொடர்ச்சியாக 4 போட்டிகளில் இரண்டு கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற புதிய சாதனையையும் மெஸ்ஸி நிகழ்த்தியுள்ளார். இதற்கு முன்பாக கிறிஸ்டியானோ ரொனால்டோ 1,202 போட்டிகளில் இந்த மைல்கல்லை அவரது 38 ஆண்டுகள் 321 நாள்களில் எட்டியிருந்தார். தற்போது, மெஸ்ஸி இந்த மைல்கல்லை 1,111 போட்டிகளில் 38 ஆண்டுகள் 15 நாள்களில் எட்டி அசத்தியுள்ளார்.

## ஜிம்பாப்வே அணி அறிவிப்பு

தென் ஆப்பிரிக்கா, நியூசிலாந்து மற்றும் ஜிம்பாப்வே கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு டி20 தொடர் ஜிம்பாப்வேயில் வரும் 14-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோதும். இதன் முடிவில் புள்ளி பட்டியலில் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும்.

இந்நிலையில் இந்த போட்டிக்கான ஜிம்பாப்வே அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சிக்கந்தர் ராசா தலைமையிலான அந்த அணியில் பிளஸ்சிங் முசரபானி, வெஸ்லி மாதவரே பிரையன் பென்னட் போன்ற முன்னணி வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். ஜிம்பாப்வே அணி விவரம் பின்வருமாறு:- சிக்கந்தர் ராசா (கேப்டன்), பிரையன் பென்னட், ரியான் பர்ல், ட்ரெவர் குவாண்டு, கிளைவ் மடாண்டே, வெஸ்லி மாதேவெரே, டினோடெண்டா மபோசா, வெலிங்டன் மசகட்சா, வின்சென்ட் மசகேசா, டோனி முனியோங்கா, தஷிங்கா முசெகிவா, பிளஸ்ஸிங் முசரபானி, டியான் மியர்ஸ், ரிச்சர்ட் ங்காரவா, நியூமன் நியாம்ஹுரி, தபத்ஸ்வா சிகா.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே. பழனிசாமி நேற்று காலை சேலம் மாவட்டம், ஏத்தாப்பூர் பகுதியில் உள்ள ஸ்ரீ முத்துமலை முருகன் திருக்கோயிலில் சிறப்பு வழிபாடு நடத்தினார். அப்போது அவருக்கு வெள்ளி வாள் வழங்கப்பட்டது. அருகில் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# கடன் வசூல்: நிதி நிறுவனங்களுக்கு நிர்மலா சீதாராமன் அறிவுறுத்தல்

**புதுடெல்லி, ஜூலை 11-**

நிதி நிறுவனங்களுக்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவுரை வழங்கியுள்ளார்.

டெல்லியில் நடைபெற்ற வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மாநாட்டில் நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பங்கேற்று பேசினார். அப்போது அவர் கூறியதாவது: கடன்களை வசூலிக்கும்போது, வாடிக்கையாளர்கள் கண்ணியமாகவும், மரியாதையாகவும் நடத்தப்பட வேண்டும். ரிசர்வ் வங்கியின் விதிகளை பின்பற்றி கடன்களை வசூலிக்க வேண்டும்.

ரூ.500 கடனை செலுத்தாதவர்களிடம் நிதி நிறுவன ஊழியர்கள் கடினமாக நடந்து கொண்டதாக பல ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன. நீங்கள் உங்களின் வேலையைத்தான் செய்கிறீர்கள் என்பது தெரியும். ஆனால், மனசாட்சி இல்லாமல் செயல்படக் கூடாது.வங்கி சாரா நிதி நிறுவனங்கள் தற்போது வங்கிகளால் வழங்கப்படும் மொத்த கடனில் 24% மட்டுமே வழங்குகின்றன. இதை 2047ல் குறைந்தது 50% ஆக உயர்த்த வேண்டும். வங்கிசாரா நிதி நிறுவனங்களுக்கு உரிய ஆதரவு அளிப்பதில் அரசு உறுதியாக உள்ளது'' என்றார்.

# காவி உடை அணியும் நிலைக்கு மாறி விட்டார் இ.பி.எஸ்.

## அமைச்சர் சிவசங்கர் விமர்சனம்

**அரியலூர், ஜூலை 11-**

கோவில் நிதியில் கல்லூரி கட்ட எதிர்ப்பு தெரிவிக்கும் பழனிசாமி, வெள்ளை வேட்டிக்குப் பதிலாக காவி உடை அணியும் நிலைக்கு மாறிவிட்டார் என்று அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கூறினார்.

அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களில் பேருந்து சேவை நீட்டிப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: "தென் மாவட்ட நெடுஞ்சாலைகளில் உள்ள 4 சுங்கச்சாவடிகளுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகம் நிலுவைத் தொகை வைத்துள்ளதால், ஜூலை 10-ம் தேதி (நேற்று) முதல் அந்த சுங்கச்சாவடிகளில் அரசுப் பேருந்துகளை அனுமதிக்கக் கூடாது என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது. மக்களுக்கு பாதிப்பில்லாத வகையில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தியாவுக்கே வழிகாட்டியாக தமிழகத்தில் நீதிக் கட்சி ஆட்சியில் அமைக்கப் பட்டது ன் இந்து சமய அறநிலையத் துறை. அந்த துறை பணத்தில் கல்லூரி கட்டுவதற்கு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி எதிர்ப்பு தெரிவிக்கிறார். நீதிக்கட்சி வழியில் வந்த திராவிட இயக்கத்தின் வழியில் ஆட்சி செய்ததாக சொன்ன பழனிசாமி இப்படி பேசுவது, அவர் என்ன நிலைப்பாட்டுக்கு மாறியுள்ளார் என்பதைக் காட்டுகிறது. அவர் வெள்ளை வேட்டிக்குப் பதிலாக, காவி உடை அணியும் நிலைக்கு மாறிவிட்டார். கோவில் நிதி மட்டுமல்ல, எந்த வழியில் வந்த நிதியாக இருந்தாலும் அதை கல்விக்காக பயன்படுத்துவதில் தவறில்லை என்று அமைச்சர் கூறினார்.

# ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டில் ஒரு லட்சம் மீன்குஞ்சுகள் விடும் பணி

## அமைச்சர் தொடங்கி வைத்தார்

**தூத்துக்குடி, ஜூலை 11-**

ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டில் இருந்து தாமிரபரணி ஆற்றில் நாட்டின கெண்டை மீன்குஞ்சுகள் விடும் பணிகளை மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மாவட்ட கலெக்டர் இளம்பகவத் தலைமையில் தொடங்கி வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பேசியபோது, "தமிழ்நாட்டில் நாட்டின மீன் வளங்களை பாதுகாத்து, பெருக்கிட ஆறுகளில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்திடும் திட்டத்தின் கீழ் 2025-26-ம் ஆண்டில் மொத்தம் 40 லட்சம் மீன்குஞ்சுகள் ரூ.120 லட்சம் செலவில் ஆறுகளில் விடும் பணி நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் மணிமுத்தாறு அரசு மீன்குஞ்சு உற்பத்தி மையத்தில் வளர்க்கப்பட்ட 8-10 செமீ அளவுள்ள 1 லட்சம் மீன்விரலிகள் இன்றைய தினம் (நேற்று) ஸ்ரீவைகுண்டம் தாமிரபரணி ஆற்றில் விடப்பட்டுள்ளது. மேலும் மீன்வளத் துறை மூலம் உள்நாட்டு மீனவர்களை பாதுகாக்கின்ற விதமாக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இன்றைய தினம் தேசிய மீன்வளர்ப்பு தினமாக கொண்டாடும் வகையில் தாமிரபரணி ஆற்றில் ஒரு லட்சம் மீன் குஞ்சுகளை இருப்பு செய்கின்ற பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஏற்கெனவே உள்நாட்டு மீனவர்கள் குளங்களில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் நிலையில் ஆறுகளிலும் மீன் பிடிக்கின்ற வகையிலே இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இன்றைய தினம் தொடங்கப்பட்டிருக்கின்றது'' என தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் தூத்துக்குடி (மண்டலம்) மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை இணை இயக்குநர் சந்திரா, தூத்துக்குடி மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் புஷ்ரா ஷப்னம், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மீன்வளம் மற்றும் மீனவர்நலத்துறை உதவி இயக்குநர்கள் தீபா, மோகன்ராஜ், உள்நாட்டு மீனவ பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# புட்டபர்த்தி சாய்பாபா கோவிலில் குரு பூர்ணிமா விழா கோலாகலம்

## ஏராளமானோர் பங்கேற்பு

**புட்டபர்த்தி, ஜூலை 11-**

குரு பூர்ணிமாவை ஒட்டி, ஆந்திராவின் புட்டபர்த்தியில் உள்ள சாய் பிரசாந்தி நிலையத்தில் நேற்று (ஜூலை10) காலை முதல் இரவு வரை பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

காலத்தால் அழியாத பாரம்பரியத்தை போற்றும் பக்தி, ஆன்மிக சிந்தனைகள் மற்றும் கூட்டு வழிபாட்டுடன் தெய்வீக ஆசிரியரும், நித்திய வழிகாட்டியுமான பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவுக்கு மரியாதை செலுத்தும் விதமாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. நிகழ்ச்சியை ஒட்டி, சாய் பிரசாந்தி நிலையத்தில் விழாக்கோலம் பூண்டுள்ளது. குல்வந்த் அரங்கம் வண்ண வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

காலை 8:00க்கு வேத பாராயணத்துடன் விழா துவங்கியது. தொடர்ந்து காலை 8:20க்கு பிரசாந்தி பஜன் குழுமத்தின் 'குரு வந்தனம்' நடைபெற்றது. காலை 9:05 மணிக்கு ஸ்ரீ சத்யசாய் மத்திய அறக்கட்டளை டிரஸ்டி ஸ்ரீ எஸ்.எஸ்.நாகானந்த் வரவேற்புரையில், பகவானின் போதனைகளையும், பகவத் கீதை உட்பட வேதங்களில் உள்ளவற்றையும் மேற்கோள் காட்டி, சத்குருவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

காலை 9:15 மணிக்கு ஸ்ரீ சத்யசாய் சேவா அமைப்பின் அகில இந்திய தலைவர் நிமிஷ் பாண்டியா உரையாற்றினார். காலை 9:25 மணிக்கு உள்ளூர் விவசாயிகளுக்கு பண்ணை உபகரணங்கள் விநியோகம் நடைபெற்றது. விழாவில் தலைமை விருந்தினராக மத்திய கிராமப்புற மேம்பாடு, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் பங்கேற்று சிறப்புரையாற்றினார். தொடர்ந்து சொற்பொழிவு, பஜனை நிகழ்ச்சிகளுக்கு பின், பகவானின் பிருந்தாவனத்துக்கு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில், ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

### திருமங்கலம் பகுதியில்

# பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள கப்பலூர் சுங்கச்சாவடியை இடமாற்றம் செய்திட கோரிக்கை

### தமிழ்நாடு சட்டமன்ற உறுதிமொழி குழுவிடம் மனு



**திருமங்கலம், ஜூலை 11-**

திருமங்கலம் பகுதி மக்களுக்கு பெரும் இடையூறாக உள்ள கப்பலூர் சுங்கச்சாவடியை இடமாற்றம் செய்திட கோரி தமிழ்நாடு சட்டமன்ற உறுதிமொழிக் குழுவிடம் கப்பலூர் சுங்கச்சாவடி எதிர்ப்பு ஒருங்கிணைப்பு குழுவினர் மனு அளித்தனர்.

அந்த மனுவில், கடந்த 2012-ம் ஆண்டில் மத்திய சாலை போக்குவரத்து அமைச்சகம் தேசிய நெடுஞ்சாலை எண் 7- ஐ நான்கு வழி சாலையாக விரிவாக்கம் செய்து அதற்கு எண் 44 என்று பெயர் வைத்து கட்டண சாலையாக அறிவித்தது.மத்திய சாலை போக்குவரத்து அமைச்சகத்தின் வழிகாட்டலின்படி இச்சாலையில் 60.கி.மீட்டருக்கு, ஒரு கட்டண சுங்கசாவடி வீதம் அமைப்பது என்ற விதிமுறையிலும் சுங்க சாவடி அமைவிடம் நகராட்சி எல்கையில் இருந்து 5 கி.மீட்டர்க்கு அப்பால் இருக்க வேண்டும் என்ற விதியை கடைபிடிக்க வேண்டும்.

மேலும் சுங்க கட்டண சுங்க சாவடி அமைவிடத்தின் அருகில் உள்ள மக்கள் இச்சாலையை கடந்து செல்ல இலவச அனுமதி வழங்கவேண்டும் என்ற விதி முறைகளுடன் சுங்க சாவடி அமைக்க வேண்டும் என்று வழிகாட்டியுள்ளது. இந்நிலையில் மேற்படி நான்கு வழி சாலையில் கப்பலூரில் சுங்க கட்டண சாவடி அமைக்க குத்தகை எடுத்த ஒப்பந்ததாரர்கள் மத்திய சாலை போக்குவரத்து அமைச்சகத்தின் வழிகாட்டுதலை பின்பற்றாமல் கப்பலூர் டோல்பிளாசா என்ற பெயரில் சுங்க கட்டண சுங்க சாவடி அமைக்கப்பட்டள்ளது.

இது மத்திய சாலை போக்குவரத்து அமைச்சகத்தின் வழிகாட்டுதலை மீறி திருமங்கலம் நகராட்சி எல்கையில் இருந்து 1.5 கிலோ மீட்டர் தூரத்தில் இந்த டோல்பிளாசா அமைக்கப்பட்டு உள்ளது. மேலும் கப்பலூர் டோல்பிளாசாவிற்கு தெற்கில் விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் அமைந்துள்ள டோல்கேட்டுக்கும், கப்பலூர் டோல் பிளாசாவுக்கு வடக்கில் திண்டுக்கல் மாவட்டம் கொடைரோடு டோல்கேட்டுக்கும் இடைப்பட்ட தூரமானது 47 மற்றும் 52 கிலோ மீட்டர் தூரம் தான் உள்ளது. மேலும் கிழக்கில் தூத்துக்குடி நான்குவழி சாலையில் அமைந்துள்ள வலையங்குளம் டோல்கேட்டுக்கும் கப்பலூர் டோல் கேட்டுக்கு இடைப்பட்ட தூரம் 14 கிலோமீட்டர் ஆகும்.

மேலும் இத்டோல்பிளாசா அமைந்துள்ள இடத்தில் உயர்மட்ட மேம்பாலம் அமைந்துள்ளது. இவை அனைத்தும் மத்திய சாலை போக்குவரத்து அமைச்சகத்தின் விதி முறைகளுக்கு புறம்பாக அமைத்துள்ளனர்.இதனால் திருமங்கலம் மற்றும் சுற்றுவட்டார மக்கள் இத்டோல் பிளாசாவை கடக்க கட்டாய வசூலுக்கு உட்படுத்தப் படுகிறார்கள். மீறினால் கும்பல் வைத்து தாக்கப்படுவதும் வண்டிகளை சேதப்படுத்துவதும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. மேலும் பணிகளுக்கு செல்பவர்களும் பள்ளி கல்லூரிகளுக்கு செல்லும் மாணவர்களும் கால விரையத்தால் மிகுந்த மனஉளைச்சலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். மேற்படி பாலத்திலிருந்து வரும் வாகனங்கள் டோல்பிளாசாவால் நிலைதடுமாறி பல விபத்துகளும் உயிர்சேதங்களும் ஏற்படுகிறது. நாங்கள் இது குறித்து கடந்த 12 ஆண்டுகளாக மத்திய மாநில அரசுகளிடமும் மாவட்ட நிர்வாகத்திடமும் எங்கள் கோரிக்கைகளை பலமுறை எடுத்து வைத்தும் ஆட்சியாளர்கள் எங்கள் நியாயமான கோரிக்கைகளை தீர்த்து வைத்து மேற்படி சுங்கச்சாவடியை திருமங்கலம் சுற்று வட்டார பொதுமக்கள் பாதிக்காத வகையில் வேறு இடத்தில் மாற்றி வைக்க நடவடிக்கை எடுக்க மறுக்கின்றனர். நாங்கள் இது குறித்து உயர்நீதி மன்றத்தில் அல்லது உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தால் நீதிமன்றம் இதை எவ்வாறு எடுத்துக் கொள்ளும் என்றும் நீதிமன்றத்தின் நேரம் எங்களால் பாதிக்கப்பட்டுவிடுமோ எனவும் தோன்றுகிறது.

ஆகவே தாங்கள் எங்களது நியாயமான புகாரினை திருமங்கலம் மற்றும் சுற்று வட்டார கிராம மக்கள் என்ற முறையில் இந்த கடிதம் மூலம் தங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம். திருமங்கலம் மற்றும் சுற்றுவட்டார கிராம மக்களின் வாழ்க்கை மற்றும் சுதந்திரத்தை இந்த சுங்கச்சாவடி பாதிப்பதால் மேற்படி சுங்கசாவடியை வேறு இடத்திற்கு மாற்றிடும் வகையில் இந்த மனுவினை பரிசீலித்து திருமங்கலம் மற்றும் சுற்று வட்டார பொதுமக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கும் அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள தடையின்றி சாலைகளில் செல்வதற்கு உரிய உரிமையை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்து இலட்சக்கணக்கான மக்களுக்கு உதவிடுமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### பசும்பொன் தேவரின் நினைவிடம்

# சொத்துக்களை ஒப்படைக்க கோரி ராமநாதபுரம் கலெக்டரிடம் வாரிசுகள் மனு



**ராமநாதபுரம், ஜூலை 11-**

சுதந்திரப் போராட்ட தியாகி பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் நினைவிடம், கோவில் நிர்வாகம் மற்றும் சொத்துக்களை ஐகோர்ட்டு உத்தரவின் படி தேவரின் நேரடி வாரிசுகளான தங்களிடம் ஒப்படைக்க கோரி ராமநாதபுரம் கலெக்டரிடம் தேவரின் வாரிசுகள் நேரில் சந்தித்து மனு அளித்தனர். இதுதொடர்பாக கமுதி மேலராமநதி பகுதியை சேர்ந்த மணிகண்டன் தலைமையில் 8 பேர் நேற்று காலை ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகம் வந்தனர். இவர்கள் கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோனை நேரில் சந்தித்து மனு அளித்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:- மறைந்த சுதந்திர போராட்ட தியாகி பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் தந்தையான உக்கிரபாண்டி தேவருக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். முதல் மனைவி இந்திராணி இரண்டாவது மனைவி நாகம்மாள். முதல் மனைவி இந்திராணியின் மகனான முத்துராமலிங்கத் தேவருக்கு திருமணம் ஆகாததால் வாரிசுகள் இல்லை. பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கடந்த 1963-ஆம் ஆண்டு காலமானார். உக்கிரபாண்டி தேவரின் இரண்டாவது மனைவியான நாகம்மாளுக்கு இந்திராணி என்ற மகள் உள்ளார். இந்திராணிக்கு திருமணமாகி நாகூர்கனி மற்றும் முத்துராமலிங்கம் ஆகிய இரண்டு மகன்கள் உள்ள நிலையில் கடந்த 1986 ஆம் ஆண்டு இந்திராணி உயிரிழந்தார். சுதந்திர போராட்ட வீரர் மறைந்த முத்துராமலிங்கத் தேவரின் தந்தை உக்கிரபாண்டி தேவரின் தங்கச்சி அதாவது முத்துராமலிங்க தேவரின் அத்தை மகனான தங்கவேலு மற்றும் மகளான காந்தி மீனாள் ஆகிய இருவரும் முத்துராமலிங்க தேவருக்கு நேரடி வாரிசு என கூறி நினைவிடம் மற்றும் அவர் வாழ்ந்த வீடு உள்ளிட்டவற்றை நிர்வாகித்து வருகின்றனர். முத்துராமலிங்க தேவரின் தந்தையான உக்கிரபாண்டி தேவரின் இரண்டாவது மனைவி வழியில் வந்த 8 பேரன் பேத்திகள் மட்டுமே முத்துராமலிங்க தேவரின் நேரடி வாரிசு என மதுரை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதனை எதிர்த்து தேவரின் நினைவிடம் மற்றும் வாழ்ந்த வீடு உள்ளிட்டவற்றை நிர்வாகித்து வரும் காந்தி மீனாள் தரப்பினர் தான் நேரடி வாரிசு என உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த நிலையில் காந்தி மீனாள் நேரடி வாரிசு இல்லை எனவும் பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் சொத்துக்கள் மீது எந்த உரிமையும் கோர முடியாது என தீர்ப்பளித்தது. இருப்பினும் நீதிமன்ற உத்தரவை மீறி தற்போது வரை காந்தி மீனாள் தேவரின் நினைவிடம் மற்றும் கோயில் நிர்வாகத்தையும், தியாகிகளுக்கு வழங்கப்படும் பென்ஷன் பணத்தையும் தேவரின் நேரடி வாரிசுதாரர்களான இதுவரை எங்கள் 8 பேரிடம் ஒப்படைக்கவில்லை.

எனவே, அதனை ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பதோடு வரும் அக்டோபர் 30 ஆம் தேதி பசும்பொன் கிராமத்தில் நடைபெறும் தேவர் குருபூஜை சமுதாய சடங்குகளில் நேரடி வாரிசுகள் 8 பேர் பங்கு கொள்ளவும் மாவட்டத்தில் இருக்கும் தேவரின் அனைத்து சொத்துக்களையும் 8 பேருக்கு சரிசமமாக பகிர்ந்து அளிக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனுவை பெற்றுக்கொண்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் கலோன் இது குறித்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.

# திருமலைக்கேணியில் பவுர்ணமி பூஜை விழா



**நத்தம், ஜூலை 11**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக் கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஆனிமாத பவுர்ணமி பூஜை விழா நடந்தது. இதையொட்டி முருகப் பெருமானுக்கு பால், பழம், பன்னீர், புஷ்பம், இளநீர், விபூதி உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது. இதில் ராஜாங்க திருக்கோலத்தில் முருகப்பெருமான் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். விழாவில் சுற்று வட்டாரங்களிலிருந்தும், வெளி மாவட்ட பகுதிகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து அவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதைப் போலவே நத்தம் மாரியம்மன் கோவில், கோவில்பட்டி கைலாசநாதர் கோவில், குட்டூர் அண்ணாமலையார் கோவில், அக்ரஹாரம் வாராஹி அம்மன் கோவில், அசோக்நகர் பகவதி அம்மன் கோவில், மீனாட்சிபுரம் காளியம்மன், கர்ணம் தெரு மதுரகாளியம்மன் கோவில்களிலும் பவுர்ணமியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது. இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# நத்தம்: வேட்டைக்காரன் கோவில் கும்பாபிஷேகம்



**நத்தம், ஜூலை 11-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே புன்னப்பட்டியில் வேட்டைக்காரன், சின்னம்மாள், பட்டவன், நொண்டிச்சாமி கோவில்களில் கும்பாபிஷேக விழா நடந்தது.இதையொட்டி கோவில் முன்பு அமைக்கப்பட்டிருந்த யாகசாலையில் முதல் நாள் கணபதி ஹோமம்,மஹாலெட்சுமி ஹோமம், வாஸ்து சாந்தி மற்றும் முதல்கால யாகசாலை பூஜைகள் நடந்தது. தொடர்ந்து நேற்று காலையில் 2-ம் கால யாக பூஜைகள் உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் நடந்தது.

பின்னர் மேளதாளம் முழங்க ஏற்கனவே யாகசாலையில் வைக்கப்பட்டிருந்த அழகர்மலை, கரந்த மலை, காசி, ராமேசுவரம், வைகை, உள்ளிட்ட பல்வேறு தீர்த்த குடங்கள் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டது. பின்னர் அங்கு சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க கோபுர கலசத்தில் புனித தீர்த்தம் ஊற்றப்பட்டு பூஜைகளும், தீபாராதனைகளும் நடந்தது. அப்போது வானத்தில் கருடன்கள் வட்டமிட்டது.இதில் கோவிலை சுற்றி ஏராளமான பக்தர்கள் நின்று கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து அவர்களுக்கு பூஜை மலர்களும்,புனித தீர்த்தமும், அறுசுவை உணவு அன்னதானமும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை புன்னப்பட்டி கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# மாணவர்கள் உயர்கல்வி சேர்க்கை சிறப்பு குறைதீர் கூட்டம்: விருதுநகர் கலெக்டர் தகவல்

**விருதுநகர், ஜூலை 11-**

விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் விண்ணப்பித்து இடம் கிடைக்காத மாணவர்களைக் கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி கல்வியில் சேர்வது தொடர்பான நான்காம் கட்ட சிறப்பு குறைதீர் கூட்டம் வரும் 11.07.2025 இன்று காலை 10.00 மணியளவில் நடைபெறும். இந்நிகழ்வில், பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மற்றும் கல்லூரியில் சேர இயலாத மாணவர்கள் பங்கு பெறலாம். 2025-26 கல்வியாண்டு மட்டுமல்லாது அதற்கு முந்தைய கல்வியாண்டுகளிலும் பயின்று கல்லூரியில் சேராத மாணவர்களும் இக்குறைத்தீர் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். இதன் மூலம் மாணவர்களுக்கு உடனடியாக கல்லூரியில் சேர்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்படும். எனவே உயர்கல்வியில் சேர்வதற்கான சந்தேகங்கள் மற்றும் கோரிக்கைகள் குறித்து இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்துகொண்டு பயனடையுமாறு மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா தெரிவித்துள்ளார்.



**திண்டுக்கல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜசேகரன் முன்னிலையில் பாலகிருஷ்ணாபுரத்தில் உள்ள பெரியசெட்டிகுளம், சல்லி கரையான் குளம், செட்டிநாயக்கன்பட்டியில் உள்ள செங்குளம், அணைப்பட்டியில் உள்ள ஆயப்பண்ணைகுளம், ஆகியவற்றிற்கான மீன் பிடிப்பதற்கும், குளம் பராமரிப்பதற்கான ஏலம் நடைபெற்றது. உடன் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தாமோதரன் உள்ளார்.**

# அருப்புக்கோட்டை மீனாட்சி சொக்கநாதர் கோவில் தேர் திருவிழா

### அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்



**அருப்புக்கோட்டை, ஜூலை 11-**

அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரத்தில் மீனாட்சி, சொக்கநாதர் கோவில் உள்ளது. கடந்த மாதம் 18-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. மீனாட்சி, சொக்கநாதர் கோவில் விழாவில் முக்கிய நிகழ்வான தேரோட்ட நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. மீனாட்சி சொக்கநாதர் சிறப்பு அலங்காரத்தில் தேரினில் நான்கு ரத வீதி வழியாக உலா வந்து பொதுமக்களுக்கு அருள் பாலித்தார் . அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தேரினை வடம் பிடித்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலைத்துறை உதவி ஆணையர் நாகராஜன், இன்ஸ்பெக்டர் சந்திரமோகன், கோவில் செயல் அலுவலர் தேவி, முன்னாள் ஒன்றிய குழு தலைவர் சுப்பாராஜ், முன்னாள் நகர் மன்ற தலைவர் சிவப்பிரகாசம் தொழிலதிபர்கள் கணேசன், முருகன், நகர மன்ற துணைத் தலைவர் பழனிச்சாமி, நகர கழகச் செயலாளர் ஏ.கே. மணி, மண்டபடிகாரர்கள் உள்பட ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். உதவி போலீஸ் சூப்பிரண்டு மதிவாணன் மேற்பார்வையில், இன்ஸ்பெக்டர் பாலமுருகன் தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.



**பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் 600க்கும் மேற்பட்ட மாற்று கட்சியினர் அமைச்சர் தங்கம் தென்னரசு முன்னிலையில் தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் காதர் பாஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன், முன்னாள் அமைச்சர்கள் டாக்டர் சுந்தர்ராஜன், சத்தியமூர்த்தி,நகர் செயலாளர்கள் சேர்மன் சேது கருணாநிதி, ஜீவரத்தினம், போகலூர் ஒன்றிய செயலாளர்கள் குணசேகரன், கதிரவன், மாவட்டத் துணைச் செயலாளர் கருப்பையா, பரமக்குடி நகர் இளைஞர் அணி செயலாளர்ள் வழக்கறிஞர் துரைமுருகன், ராஜா சேதுபதி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**

### கமுதியில் கலைஞர் கருணாநிதியின்

# 102-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கட்சி நிர்வாகிகள் 102 பேருக்கு பொற்கிழி

### அமைப்பு செயலாளர் வழங்கினார்



**கமுதி, ஜூலை 11-**

ராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் திமுக வடக்கு ஒன்றியம் சார்பில் கலைஞர் 102-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, நேற்று மாலை 5000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பேரறிஞர் அண்ணா திடலில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

தி.மு.க. மாவட்ட செயலாளர் ராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் தலைமை தாங்கினார்.தி.மு.க. வடக்கு ஒன்றிய செயலாளர் வாசுதேவன் வருகை தந்த அனைவரையும் வரவேற்று பேசினார், அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி முன்னிலை வகித்தார்.

கொள்கை பரப்புச் செயலாளர் ஐ.லியோனி மற்றும் கழக வழக்கறிஞரணி இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான், மாநில மாணவர் அணி செயலாளர் ராஜீவ்காந்தி,பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, முன்னாள் அமைச்சர்கள் சத்தியமூர்த்தி, சுந்தரராஜ்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகவேல், திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக பொது மக்களுக்கான மதியம் அசைவ அன்னதானத்தை அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ் பாரதி துவக்கி வைத்து பேசிய போது கழக அரசின் நான்காண்டு சாதனை,மகளிர் உரிமைத்தொகை,பெண்களுக்கு இலவச பேருந்து வசதி, அனைவருக்கும் கலைஞர் வீடு திட்டம், பள்ளி மாணவர்களுக்கு உயர் கல்வியில் 7.5 சதவீதம் தனி இட ஒதுக்கீடு என பல்வேறு தி.மு.க. அரசின் சாதனைகளை விளக்கி பேசினார் அதே போல தற்போது ஓரணியில் தமிழகம் என்று ஒரு சிறப்பான திட்டம் மூலம் தமிழக முழுவதும் வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூறுவோம் என கூறி தி.மு.க. அரசுக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு புகழாரம் சூட்டினார் அதனை தொடர்ந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து பொது மக்களுக்கும் நலத்திட்டங்களை தொடங்கி வைத்தார்.

இதில் மூத்த முன்னோடிகள் 102 பேருக்கு பொற்கிழியும், விதவைப் பெண்களுக்கு தையல் இயந்திரம், 5000 ஏழை எளியோருக்கு வேஷ்டி, சேலைகள், சலவை தொழிலாளர்களுக்கு இஸ்திரி பெட்டி, சிகை அலங்கார கலைஞர்களுக்கு உபகரணங்கள் மற்றும் மரக்கன்று வழங்கப்பட்டது.

விழாவில் 10 ஆயிரம் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.மேலும் விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தி.மு.க. வடக்கு ஒன்றிய செயலாளர் வாசுதேவன் செய்திருந்தார்.

நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகள், கழக இளைஞர்கள் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, அனைத்து சார்பு அணிகள் கலந்து கொண்டார்கள்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் திருவாரூர், பை-பாஸ் சாலையில் தி.மு.க. சார்பில் நிறுவப்பட்டுள்ள கலைஞரின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, கொடியினை ஏற்றி வைத்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, கோவி.செழியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ, தாட்கோ தலைவர் இளையராஜா, தாட்கோ முன்னாள் தலைவர் மதிவாணன், திருவாரூர் நகர மன்ற தலைவர் புவனப் பிரியா செந்தில், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கல்யாணம் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



'மக்களைக் காப்போம்; தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் தொடர் பிரச்சார சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி நேற்று விழுப்புரம் மாவட்டம், பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள தனியார் விடுதியில் முண்டியம்பாக்கம் மற்றும் செஞ்சி செம்மேடு ஆலைகளின் கரும்பு விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகளுடன் கலந்துரையாடி, அவர்களிடம் மனுக்களைப் பெற்றார். அருகில் முன்னாள் அமைச்சர் சண்முகம், முன்னாள் மத்திய இணை அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன் உள்ளிட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.




திருவாரூர் மாவட்டம், கிடாரங்கொண்டானில் அமைந்துள்ள கல்லூரி மாணவியர்களுக்கான சமூகநீதி விடுதிக்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டு, மாணவியர்களிடம் கலந்துரையாடி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன், மாவட்ட கலெக்டர் மோகனச்சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# 2,423 புதிய திட்டப்பணிகளுக்கு...(1-ம் பக்க தொடர்ச்சி)

மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நன்னிலம் பேரூராட்சி, மணவாளன் பேட்டையில் 19 லட்சம் ரூபாய் செலவில் 30,000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கொறக்கை கால்நடை பண்ணையில் 1 கோடியே 1 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் வற்றுப் பசுக்களுக்கான வலுவூட்டப்பட்ட கான்கிரீட் கொட்டகை, 1 கோடியே 1 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் கறவைப் பசுக்கள் மற்றும் கன்றுகளுக்கான கான்கிரீட் கொட்டகை, 25 லட்சம் ரூபாய் செலவில் பண்ணை மேலாளர் அலுவலகக் கட்டிடம், 30 லட்சம் ரூபாய் செலவில் கறவைப் பசுக்களுக்கான கொட்டகை. வேளாண் மற்றும் உழவர் நலத்துறை சார்பில் திருவாரூர், உதயமார்த்தாண்டபுரம், கட்டிமேடு, எடையூர் ஆகிய இடங்களில் 2 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் விதைக் கிடங்குகள், திருவாரூரில் 1 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் அரசு வேளாண் கருவிகள் மற்றும் பணிமனை அலுவலகக் கட்டிடம், குடவாசல் மற்றும் கொரடாச்சேரி ஆகிய இடங்களில் 3 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் உரக்கிடங்குகளை திறந்து வைத்தார்.

வனத்துறை சார்பில், திருவாரூர் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் 1 கோடியே 16 லட்சம் ரூபாய் செலவில் வனத் தீ கட்டுப்பாட்டு மையக் கட்டிடம் மற்றும் திருவாரூர் வனக்கோட்டம், முத்துப்பேட்டை சரகத்தில் படகு குழாம் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கான அடிப்படை கட்டமைப்புப் பணிகள். பதிவுத் துறை சார்பில், திருவாரூர் பதிவு மாவட்டத்தில் கூத்தாநல்லூரில் 1 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் சார் பதிவாளர் அலுவலகக் கட்டிடம் என மொத்தம் 73 கோடியே 74 லட்சம் ரூபாய் செலவில் 1234 முடிவுற்றப் பணிகளை தமிழ்நாடு முதல்வர் நேற்று திறந்து வைத்தார். மேலும், 172 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 2,423 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 600 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 67,181 பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த விழாவில் அமைச்சர்கள் கே.என். நேரு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கோவி.செழியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மெய்யநாதன், டி.ஆர்.பி.ராஜா மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# தேர்தலில் போட்டியிடாத அரசியல் கட்சிகளை நீக்கும் பணி தொடக்கம்

**சென்னை, ஜூலை 11-**

இந்திய தேர்தல் ஆணையம், பதிவுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத 345 அரசியல் கட்சிகளை முதற்கட்டமாக பட்டியலிலிருந்து நீக்கும் நடவடிக்கையை தொடங்கியுள்ளது.

சென்னை மாவட்டத்தில் 2019ஆம் ஆண்டு முதல் கடந்த 6 ஆண்டுகளாக ஒரு தேர்தலிலாவது போட்டியிட வேண்டும் என்ற அத்தியாவசிய நிபந்தனையை நிறைவேற்றத் தவறியுள்ள மற்றும் இருப்பிடம் கண்டறிய முடியாத கட்சிகள் என்பதன் காரணமாக 14 பதிவுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளை முதற்கட்டமாக பட்டியலிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கையை இந்திய தேர்தல் ஆணையத்தின் தலைவர் ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையாளர்கள் டாக்டர் சுக்பீர் சிங் சந்து மற்றும் டாக்டர் விவேக் ஜோஷி ஆகியோர் தலைமையில் தொடங்கியுள்ளது. எந்த கட்சியும் தேவையில்லாமல் பட்டியலிலிருந்து நீக்கப்படக்கூடாது என்பதற்காக, சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அந்த கட்சிகளுக்கு காரணம் கூற நோட்டீஸ் அனுப்புமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்பின், அவை தலைமை தேர்தல் அதிகாரிகளால் நடத்தப்படும் விசாரணையின் வாயிலாக அவற்றுக்கு விளக்கம் தரும் வாய்ப்பு அளிக்கப்படும். எந்தவொரு பதிவுசெய்யப்பட்ட அங்கீரிக்கப்படாத அரசியல் கட்சிகளை பட்டியலிலிருந்து நீக்குவது தொடர்பான இறுதி முடிவை இந்திய தேர்தல் ஆணையம் எடுக்கும்.

மேற்கண்ட தகவலை சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.




கரூர் திருமாநிலையூர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்பாலாஜி முன்னிலையில் 58.25 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 13 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, 3.35 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 18,332 பயனாளிகளுக்கு 162.22 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். இந்நிகழ்வில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட கலெக்டர் தங்கவேல், மேயர் கவிதா உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, கே.கே.நகர், சிவன் பூங்காவை சி.எம்.டி.ஏ. சார்பில் மேம்படுத்துவதற்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் துறைசார்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெறுவதை முன்னிட்டு முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணி மற்றும் கும்பாபிஷேகம் அன்று பொதுமக்கள் மீது புனிதநீர் தெளிக்கப்படுவது குறித்த முன்னோட்டம் பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று ஆய்வு செய்து பார்வையிட்டார். மாவட்ட கலெக்டர் பிரவீன்குமார், மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன், கோவில் அறங்காவலர் சண்முகசுந்தரம் ஆகியோர் உடன் உள்ளனர்.



சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாநில அளவிலான ஓவிய மற்றும் சிற்பக்கலைக் கண்காட்சியை தொடங்கி வைத்து பார்வையிட்டு சிறந்த கலைப்படைப்பு வழங்கிய 50 கலைஞர்கள், 12 கலையாசிரியர்கள், 3 நூலாசிரியர்கள், ஆகியோருக்கு பரிசுத் தொகை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா, கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் கவிதா ராமு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.